KALANILAYAM தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ௵ பிப்ரவரி ௴ 19௳ [No. 7.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 121
2. யாப்பிலக்கணம் (அசை-சீர்) 123
3. சூளாமணி (உரையுடன்)
நகரச் சருக்கம் (64—68) 125
4. அப்பர் (அக்கினி ஸ்தம்பனம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 128
5. உலகுக்கு வேண்டாதார் யாவர் (Joseph Addison)
K. இராஜகோபாலன். 130
6. மானத சாத்திரம் (புலன்கள் - செவி)
T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 131
7. பிஸாரோ நாடகம் - (நூன்முகம்.)
R. B. Sheridan 133
8. வர்த்தமானம் 139

கலாநிலயம்

வாழ்வாங்கு வாழ்பவர்.

5.

தன்னினைவை முன்வைக்க அதனுல் இயங்கித் தோன்றுகின்ற மகிழ்ச்சியெல்லாம் அந்தரம்நோக்கின், மனிதன் தன் சுயப்பெருமையை அறியாத சிறுமைக்கே அடையாளமாகின்ற நுண்மையை இதுகாறுங் கண்டோம். இனி, உவகைதான் ஒருவனைக் கொண்டியக்கும் நிலை எத்தகைத்தென ஆராயச் சற்று முயலலாம்.

மனம் உள்ளம் என்னும் இவ்விரு தத்துவங்களின் வேறுவேறு தன்மைகளை வகையறுத்து உணரவேண்டிய அவசியம் இக்கட்டுரைகள் வரையினும் இல்லை. எனினும், மனிதனை இயக்குவது மனம் என்பதே போல், அம்மனத்தினை இயக்குவது உள்ளம் என்று ஒருவாறு பொதுவுறக் கொள்ளலாம். மனத்தின் நினைவுகள் புறத்தே செய்கைகளாகத் தோன்றுமாறு போல் உள்ளத்தின் தூண்டல்கள் மனத்தின்கண் நினைவுகளாகத் தோன்றுகின்றன. இவைகளை அதிகமும் இங்கு விரிக்கவேண்டா.

மகிழ்ச்சியென்பது முதன்முறையில் மனத்தைச் சார்ந்து நிகழ்கின்றது; உவகை என்பது முதன் முறையில் உள்ளத்தைச் சார்ந்து நிகழ்கின்றது. ஒரு பொருளும் அப்பொருளைத் துய்க்கின்ற ஒருவனுமாய் அமைகின்ற சேர்க்கையில், அவ்வொருவன் தன்னினைவை முதலாகவைத்து விவகரிப்பது மனதைப் பற்றியும், பொருளை முதலாகவைத்து விவகரிப்பது உள்ளதைப் பற்றியும் பயில்கின்றன. மனம் பகுத்தறியும்; உள்ளம் தொகுத்துணரும். எனின், மகிழ்ச்சியென்பது மனத்தின் செய்தி, உவகை என்பது உள்ளத்தின் செய்தி. "மனம் மகிழ்ந்தது" என்றும், "உள்ளம் உவந்தது," என்றும் மோனையோடு வழங்குகின்ற சொற்றொடர்களின் இயல்பே இதற்குச் சான்று.

தன் உடைமை நிலைமைகளின் சிறப்பை நினைத்து மகிழ்ந்துகொள்வதனினும் பொருளின் உயர்வையே மதித்து உவகை யெய்துதல் பெருமை ஒருவாறு அதிகம் உடையதே. மற்றவர்களினின்று தான் வேறுவதற்குரிய சிறப்பியல்பை, வெளிப்படையாகச் சீர்தூக்கியேனும், தோன்றுமற் றேன்றுகின்ற வோர் இரகசிய உணர்ச்சியாலேனும், ஆதாரமாகப்பற்றி இயங்குவது மகிழ்ச்சி யென்னலாகின்றது. உவகையோ, தன் நினைவை முன்வைக்காது, மதிக்கப்படுகின்ற பொருளின் சிறப்பைப்பற்றி உள்ளத்தின்பால் உண்டாகின்ற ஓர் இயக்கமாகும். அப்பொருளிற்கும் தனக்கும் சம்பந்த மிருப்பினும் இலதாயினும் அப்பொருள் சிறப்புடைத்து என்னுங் கருத்திலேயே தோய்ந்து திரள்வது உவகையின் உண்மை யிலக்கணம். தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய் ஈன்ற பொழுதின் பெரிதுவப்பதற்குக் காரணம் அவன் சான்றோனுய் இருப்பதே. அப்படிச் சான்றவனுய ஒருவனைத் தன் மகனுய் எய்திய பாக்கியம் பெரிது எனும் நினைவு பின்னர் அவள் மனத்தின்கண் தொடரினுந் தொடரலாம். அவ்வாறு தொடருங்கால் அவள்மனநிலை ஒரு

சிறிது மகிழ்ச்சியின்பாற் படலாமெனினும், மிகுதி பற்றி அவள் உவகையே உடையவள் என்னற்குரியவளாகின்றாள். இவ்வாறன்றி, உயர்ந்த உத்தியோகமொன்று பெற்றுவிட்ட மகனிடத்தில் தாயுந் தமரும் கொள்வது உவகையன்று; அவனடைந்த உத்தியோகத்தினால் தமக்கும், செல்வம் அதிகாரம் மற்றவர்களைக் காட்டிலும் உயர்ந்த பதவி, முதலிய பயன்கள் கைகூடும் என்னும் மனமே அவர்கள் நோக்கங்களை முன்பிடித் துந்தும். இதனால் விளைவது மகிழ்ச்சி. இங்கு, மைந்தனையே நினைத்து எழுவதுபோல் மேற்பார்வைக்குத் தோன்றும் நினைவனைத்தும் வஞ்சனையே. ஒரோவழி மிகச்சிறு உவகை உதிக்குமேயானாலும் இதனை மிகுதிபற்றி மகிழ்ச்சியென்றே அறைதல் வேண்டும்.

உவகைக்கும் மகிழ்ச்சிக்கும் இடையிட்ட வரம்பின்வரி சிற்சிலபோது மிக நுண்ணிதாய்த் தேய்ந்து ஒன்றை மற்றொன்றுடன் மயங்கவுங் காட்டலாம். அதுவுமன்றிப் பற்பல நிலைகளில் இவையிரண்டும் ஒன்றோடொன்று குழைந்துகிடப்பதுங்கூட இயற்கையே. இப்பின்னது, "இகழ்ந்து எள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்து உள்ளம் உள்ளுள் உவப்பது உடைத்து" என்னும் திருக்குறளினகவயின் அடங்கியுளது. இரந்தவன்ஒருவன் வேண்டிய பொருளைப் பெற்றக்கால், அதன்முன் தான் வருந்திய வறுமையும் அதன்பின் தன் இடும்பைதீர்ந்த நிலையையும் ஒப்புநோக்கி மனத்தால் மகிழ்கின்றான். இம்மகிழ்ச்சி ஒருபுறமிருக்க, எள்ளாது இகழாது ஈகின்ற வள்ளல் இவன் என்று, அளித்தோனுடைய மாண்பினை மதிக்குங்கால் இரவலனது உள்ளம் அவனுமே யறியாமல் உள்ளுள் உவக்கின்றது. அவன் தான் அறியாதது மாத்திரமன்றி அவ்வுள்ளமுமே தான் உவப்பதைத் தேர்ந்திலது என்பார்போல், "உள்ளம்உள்ளுள்உவப்பதுடைத்து" எனச் சொல்தேர்ந்து விளம்புகின்றார் நாயனார். புத்திரபாக்கியமின்றி நெடிதுநாள் வருந்திய தயரதனுக்குப் புதல்வர் தோன்றலும் அவன், "கரைசெயல் அரியதோர் களிப்பின் வைகினான்" என்ற கம்பர்—(மகிழ்ச்சியின் மிகுதியே களிப்பெனப்படுவதாம்)—தனக்குப் புத்திரர் வாய்த்தனர் என்னுந் தன்மையில் அவன் மனம் இருந்த பான்மையைக் காட்டினார். பிற்றைநாள், இராமனிற் சான்றவன் ஈங்கில்லை என்ன வசிட்டன் அவனது மேன்மையைச் சிறப்புறக் குறித்தபோது, இராமனை இராமனுக்காகவே பாராட்டிய தயரதன், "பெரியதோர் உவகையன் ஆயினான்" என வேற்றுமைப் படுத்திக் காட்டிய நுண்மை கருத்துட் கொள்ளத்தக்கது. இனி, "இராமனை அரசனாக்கி யான் தவவனம் நண்ண நிற்கின்றேன், உங்கள் கருத்து யாது" என வினவிய தயரதனுக்கு, "உறத்தகும் அரசு இராமற்கு என்று உவக்கின்ற மனத்தைத் துறத்தி நீ எனும் சொல் சுடும்" எனச் சுமந்திரன் உரைத்த வாசகத்தில் உவகையை மனத்துடன் சார்த்திய இது முன்னுரைத்த மயக்கத்தின்பால் படும். சிறப்புடைய இராமனுக்குப் பின்னுஞ் சிறப்புவந் திவ் வரசினால் அடைகின்றதென்னும் எண்ணமே காரணமாதலின், சுமந்திரர் முதலாயினோர் எய்தியது உவகையே யன்றி மகிழ்ச்சியன்று. அவ்வுவகைக்குக் களனாயமைந்ததும் உள்ளமே. ஆயினும், அவ்வுவகை ஒருபுறமிருக்க, இதன் முடிவு யாதெனப் பகுத்தறிய முனைந்த சுமந்திரனது மனத்தின்கண் தயரதன் துறக்கநின்ற நினைவு தோன்றியது. இதனை ஓராத சுமந்திரன் 'உவக்கின்றமனம்' எனப்பொருந்தாச் சேர்க்கைஇயற்றிவிட்டான். "மனம் உவந்தான்" என்றும் "உளம் மகிழ்ந்தான்" என்றும் பிறழ்ந்து வருமிடங்களிற் பெரும்பாலும் இம்மயக்கம் கரந்திருப்பதைக் கணித்துணரலாம்.

இவ்வண்ணம், மயங்கியும் உறழ்ந்தும் விளைகின்ற தோற்றங்களினின்றுந் தெளிந்து, உவகை என்பதன் தத்துவம் பொருளின்தன்மையைச் சார்ந்ததென்பதை உணர்ந்துகொண்ட பின்னரே இனி நாம் உரைக்க வருவனவற்றைத் தெரிந்துகொள்ளல் கூடும். தன்னுடைய நிலையின் வேற்றுமையைத் தாக்காது பொருளின் குணத்தையே நோக்கி எழும் இவ்வுவகை, அப்பொருளின் அழகு அமைப்பு ஒழுக்கம் முதலியவைகளின் சிறப்பினால் விளையவல்லது. அழகு அமைப்பு ஒழுக்கம் முதலியனவென வகுத்துச் சொல்லினோமாயினும், அமைப்பு ஒழுக்கம் அனையவைகளோடு, உவகையை விளைவிக்கக்கூடியவைகள் அனைத்தையும் 'அழகு' என்னும் ஒரு தன்மையிலேயே அடக்கலாம். "அழகுடை யொருபொருள் நிரந்தர உவகை யாமே" என்றார் ஜான் கீட்ஸ் என்னும் ஆங்கிலக் கவியொருவர். பொருளால் உவகை விளைகின்றது என்னுங்கால், அப்பொருளின்கண்ணுள்ள அழகே இவ்வுவகையை ஊட்டுகின்றதெனக் கொள்ளல்வேண்டும். உவகைக்குக் காரணமா யமைகின்ற தன்மைகள் வேறுவேறுபோல் தோன்றமேனும் அந்தத்தில் அவையெல்லாம் அழகென்னுந் தத்துவத்தில் அடங்கு மென்பதையும் அவ்வழகே உவகையைத் தூண்டுவதென்பதையும் ஐயமற அறிதற்கு அழகென்னும் அத் தத்துவத்தையும் ஆராயவேண்டியது இன்றியமையாததாகின்றது.

அழகென்பது ஒரு பொருளன்று. அதற்கோர் தனி உருவமேனும் இருக்கையேனும் எங்கும் இல்லை. ஒன்றினது அழகு உள்ளத்தில் செல்வதற்குச் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றங்களின் உதவி வேண்டுமெனினும் அழகினால் உவப்பன புலன்கள் ஆகா. கடலலையெறியொலி சேணின்று வந்த காதிலே சேர, தூரத்திலோர் கோபுரம் புகையிற் றீட்டிய படமோ விதுவெனத் தியங்க அதனயல் தனிப் பனைமரத் திலையினூடு ஒளிந்தொளிந்து அரைமதி உதயமாகுங் காட்சி தோன்றவும், அப்புலனளவிலேயே உவகை விளைகின்றதென் றுரைப்பதற்கில்லை. புலன்களால் இவ்வாறு செலுத்தப்பெற்ற பிறகு அதனை உள்ளம் உட்கொள்கின்றது. அப்படி உட்கொண்டபின் உண்டாகின்ற ஓர்வித உணர்ச்சிதான் அழகு எனப்படும் அது :— இவ்வழகின துணர்ச்சியினின்று பூப்பது உவகை ஆம். எனின், அழகென்பது உள்ளத்தின் ஓர் உணர்வுபோன்றதே யன்றிப் புறத்தில் பாகுபடுத்தக்கூடிய ஓர் பொருளேனும் தன்மையேனும் அன்று. முன்னுரைத்த உதாரணத்தில், அழகு இருக்கும் இடம், கோபுரமன்று, பனைமரமன்று, வெண்மதியன்று, கடலொலியுமன்று, இவைகளின் சேர்க்கையுமன்று; இவைகளை ஒன்றுதொகுத்து உட்கொண்ட உள்ளத்தின் ஒருவகை உணர்வு. இவ்வுணர்வை நாமே வெளிக்கொணர்ந்து பொருள்களின் மீது பூசிவிட்டோம் என்பது தெரியாமல், அப்பொருள்களிடத்தில் அழகென்னுந் தன்மையொன்று ஏதோ இருந்ததுபோல் பாவித்து, "இது அழகிய பொருள், அல்லது அழகுடைய பொருள்" என உலகில் வழங்குகின்றோம். ஆதலின், பொருளினது அழகு, என்னுங்கால் அது தற்கிழமையுமன்று. அப்பொருளினால் தூண்டப்பெற்ற ஓர் உணர்வு, என்பதே அதன் உண்மைப் பொருளாதலால், அது மூன்றன் தொகையே ஆகக்கூடும். இது உருபு மயக்கமே.

இவ்வழகெனும் உணர்வினைத் தூண்டும் ஆற்றல், சிற்சில பொருள்களினிடத்தில் அதிகம் இருக்கலாம், சிற்சில பொருள்களினிடத்தில் குறைந்திருக்கலாம். இதுவுமன்றி, தூண்டப்பெறும் உள்ளத்தையும் அது பொருந்தி யிருக்கின்றது. எனினும் இவைகளுக்குட் சென்று நுணுகி ஆராய்வதை விடுத்து, இவ்வழகெனும் உணர்வினின்று உவகை பிறப்பதன் காரணத்தை இனிக் காணுவோம்.

யாப்பிலக்கணம்

அசை—சீர்.

[109-வது பக்கத் தொடர்ச்சி]

சீர்களின் முதலசையைப் பிரித்துக்கொள்கின்ற விதங்களைச் சென்றவாரம் காட்டி, அசைகள் நேர்அசை நிரையசை என இருவகைப்படுவதையுங் கூறினேம். முதலசையைப் பிரித்தபின் அந்தச் சீரிலுள்ள எஞ்சிய எழுத்துக்களையும் அவ்வாறே அசைகளாகப் பிரித்துவிடலாம். இன்னொரு செய்யுள் எடுத்துக்கொண்டு பயில்வோம்.

கௌவைவிரிதிரைநீர்க்காவிரிசூழ்நன்னாட்டு
மௌவல்கமழுங்குழன்மடவாய்செவ்வி
மதுவார்கவிரேநின்வாய்போல்வதன்றி
யதுபோல்வதுண்டேனுமாம்

[ஆரவாரத்தையும் விரிந்த அலைகளையும் உடைய நீரை உடைய காவிரிநதி சூழ்ந்த நல்ல நாட்டின் முல்லைமலரின் மணங்கமழும் கூந்தலையுடைய பெண்ணே, செவ்விய தேன் பொருந்திய முருக்கமலரே நின்வாய் போல்வது. அது வன்றியும் அம்முருக்கமலர் போன்றது வேறு ஏதேனும் இருப்பினும் அதுவும் உன்வாய்க்கு உவமை ஆகும்]

இச்செய்யுள் பொருளுக்கும் ஓசைக்கும் இயையப் பின்வருமாறு சீர்பிரியும்:—

கௌவை விரிதிரைநீர்க் காவிரிசூழ் நன்னாட்டு
மௌவல் கமழுங் குழன்மடவாய்—செவ்வி
மதுவார் கவிரேநின் வாய்போல்வ தன்றி
யதுபோல்வ துண்டேனு மாம்.

ஒவ்வொரு சீராக எடுத்துக்கொண்டு அதனுள் அமைந்திருக்கின்ற அசைகள் எவை என்பதைக் கற்கலாம்.

கௌவை:—முதல் எழுத்துக் கௌ என்பது நெடிலிற்குரிய இரண்டுமாத்திரையினுங் குறுகி ஒன்றரை மாத்திரையே பெற்று ஒலித்தாலும், அது சீரிற்குமுதலில் ஒரு மாத்திரையாய் அமையவல்லது என்று கூறியிருக்கின்றேம். ஆகையால் அதை ஒரு அசையாக எடுத்துக்கொள்ளவேண்டும். ஒரு தனி எழுத்து இப்படித் தனித்து அசை ஆவதால் அது நேர்அசை.

கௌவை என்னும் இந்தச் சீரில், கௌ என்னும் ஓரெழுத்து ஒரு அசையானபிறகு எஞ்சியிருக்கின்ற எழுத்து வை என்பது ஒன்றே. அந்த வொரு எழுத்து வேறோர் அசை ஆகிவிடுகின்றது. அதுவும் நேர் அசையே.

விரிதிரைநீர்க்:—இந்தச் சீரின் முதல் எழுத்து வி. இது குறில். சீரிற்கு முதலில் தனிக்குறில் ஒரு போதும் அசை ஆகாது என்று சொல்லியிருக்கின்றேம். ஆகையால் அதற்கு அடுத்தஎழுத்து ரி என்பதையும் கூடச் சேர்த்துக்கொண்டு விரி என்பதை முதல் அசையாகக் கொள்க. இரண்டு குறில்கள் அடுத்துவந்த நிரையசை இது.

இந்தச் சீரின், விரி என்னும் முதலசை போனால் எஞ்சிய எழுத்துக்கள் திரைநீர்க் என்பனவாம். இப்பொழுது இதையே சீராகப் பாவித்துக்கொண்டு முதல்அசை பிரிக்கின்ற விதிகளின்படியே எதுஅடுத்த அசையாகுமென்று பாருங்கள். தி என்னும் எழுத்துக் குறிலாகையால் அதற்கு அடுத்துவரும் ரை என்னும் ஒரு எழுத்தையும் கூடச் சேர்த்துக்கொண்டுதான் திரை என்று அசை ஆக்கவேண்டும். இதுவும் நிரையசை.

இனி எஞ்சியிருப்பன நீர்க் என்னும் எழுத்துக்கள். நீ என்னும் நெடிலை ர்க் என்னும் இரண்டு மெய்யெழுத்துக்களே தொடர்ந்து வந்திருப்பதால், அனைத்தையும் ஒன்றாய்ச் சேர்த்து, நீர்க் என்பதை ஒரு அசையாகக் கொள்ளுங்கள். இது நேர்அசை. (ஒரு குறில் அல்லது ஒரு நெடில் தனித்து நின்றாலும் மெய்யெழுத்துக்களை அடுத்து நின்றாலும் நேரசையாகும் என்று சொல்லியிருக்கின்றோம்.

விரிதிரைநீர்க், என்னும் இச்சீர், விரி-திரை-நீர்க், என மூன்று அசைகளால் ஆகியிருக்கின்றது. அவ்வசைகளும் முறையே, நிரை-நிரை-நேர்.

காவிரிசூழ்:—கா என்னும் முதல்நெடில் ஒரு நேரசை யாகின்றது. பின் விரி என்னும் இரண்டு குறில்களும் சேர்ந்து நிரையசை ஆகின்றன. பின் சூ என்னும் நெடில் பக்கத்திலுள்ள ழ் என்னும் மெய்யோடு சேர்ந்து சூழ் என்னும் ஒரு நேரசை ஆகின்றது:—கா-விரி-சூழ் = நேர்-நிரை-நேர்.

நன்னாட்டு:—முதல்நின்ற ந வென்னும் குறில் பக்கத்திலுள்ள ன் என்னும் மெய்யோடு சேர்ந்து, நன் என்னும் முதலசை ஆகின்றது. பின், னா என்னும் நெடில் பக்கத்திலுள்ள ட் என்னும் மெய்யோடு சேர்ந்து, னாட் என்னும் அசை ஆகின்றது. பிறகு எஞ்சிய டு என்னும் எழுத்துத் தனியாக நின்று நேரசை ஆகின்றது. மூன்றும் நேரசைகளே:—நன்-னாட்-டு = நேர்-நேர்-நேர்.

குறிப்பு:—சீரின் கடையில் இருப்பதால் டு என்னுந் தனிக்குறில்மட்டுமே ஒரு அசை ஆயிற்று. சீரின் கடையல்லாத மற்றவிடங்களில் ஒரு குறில் தனியாய் நின்று அசை ஆகமாட்டாது. அதன் பக்கத்தில் இருக்கின்ற மெய்யெழுத்துடனாகிலும் குற்றெழுத்துடனாகிலும் நெட்டெழுத்துடனாகிலும் சேர்ந்துதான் ஒரு அசை ஆகும். ஆயினும், சுட்டாகவேனும், தன்னைக்குறித்தும், விட்டிசைத்தும் நிற்கும்போது தனிக்குறிலும் சீரிற்கு முதலில் ஓர் அசை ஆகக்கூடும். இதனைப் பின்னோரிடத்தில் விளக்குவோம்.

மௌவல்:—மௌ - வல் = நேர் - நேர். ஔகாரம் நெடிலாயினும், அது இரண்டு மாத்திரை பெறாமல், ஒன்றரைமாத்திரை மட்டுமே பெற்று மொழிக்கு முதலில் மாத்திரம் வரும். அது தனியாக நின்று ஒரு நேர் அசை ஆயிற்று. எஞ்சிய வ என்னும் குறில் பக்கத்திலுள்ள ல் என்னும் மெய்யோடு சேர்ந்து வல் என ஒரு நேர் அசை ஆயிற்று.

கமழுங்:— கம - ழுங் = நிரை - நேர். சீரிற்கு முதலில் தனிக்குறில் அசை ஆகாதாதலால், கம எனச் சேர்த்து ஒரு நிரையசை ஆக்கல் வேண்டும். இப்படிக்கின்றி, க - மழுங் எனப் பிரிப்பது பிழை.

குழன்மடவாய்:— குழன் - மட - வாய் = நிரை - நிரை -நேர். முதலிலிருக்கின்ற கு என் னுங்குறிலோடு, அதன்பக்கத்தில் இருக்கின்ற ழ என்னுங் குறிலையும் அதற்குப் பக்கத்தில் இருக்கின்ற ன் என்னும் மெய்யையும் ஒன்றாய்ச் சேர்த்துக் குழன் என்ன ஒரு நிரையசை யாக்கவேண்டும். இதன்பின் இருப்பது ம என்னும் குறில் தனித்து அசையாகமாட்டாது.

ஆகையால் அதன் பக்கத்திலிருக்கின்ற ட என்னும் எழுத்தைமட்டும் சேர்த்துக்கொண்டு, மட என் பதை ஒரு நிரையசை ஆக்க வேண்டும். எஞ்சிய வாய் என்பது ஒரு நேர் அசை ஆகின்றது.

சேவ்வி:—செவ் - வி = நேர் - நேர். செ என்னும் குறிலிற்குப்பின் ஒரு மெய்யெழுத்து வந்து விட்ட படியால் அம்மெய்யெழுத்தோடு அவ்வசை நின்று விட்டது. சீரின் ஈற்றிலுள்ள வி என்னுந் தனிக் குறில் ஒரு அசைஆயிற்று.

மதுவார்:— மது-வார் = நிரை - நேர். முதலில் தனிக்குறிலே அசையாகப் பிரிக்கலாகாதாகையால், மது என நிரையசை ஆயிற்று. இப்படிக்கின்றி, ம-து-வார், என மூன்று நேரசைகளாகவாவது, ம - துவார், என நேர் - நிரை யாகவாவது கொள்வது தவறு

கவிரேநின்:—கவி - ரே - நின் = நிரை- நேர் - நேர். கவி என முதலிரண்டு குறில்கள் சேர்ந்து ஓர் நிரை பசையாயின. அதன் பின் இருப்பது ரே என்னும் நெடில். குறிலைப்போலல்லாமல், நெடிலானது முதல் இடை கடை எங்கிருந்தாலும் அதற்குமுன் நிற்கின்ற குறிலோடு சேர வேண்டா இடங்களில் தனியாகவே ஒரு அசை ஆகக்கூடும். இதன்பின் வருகின்ற நி என் னும் எழுத்தையோ இதனோடு சேர்த்துக்கொள்ள லாகாது.

வாய்போல்வ:—வாய்-போல்-வ = நேர் - நேர் - நேர்.

தன்றி:—தன்-றி = நேர் - நேர்.

யதுபோல்வ:—யது - போல் - வ = நிரை - நேர் - நேர். இரண்டு குறில்கள் சேர்ந்து, யது என்னும் முத லசை ஆயிற்று. பின் போ எனும் நெடில் நிற்கின்றது. அது அதன் பக்கத்திலுள்ள ல் என்னும் மெய்யோடு சேர்ந்து, போல் என ஓர் நேரசையாயிற்று. எஞ்சிய வ என்னும் குறில்மாத்திரம் சீரின் கடையில் ஒரு நேரசையாயிற்று.

துண்டேனு:— துண் - டே-னு = நேர் - நேர் -நேர்.

மாம்:—இந்தச் சீரில் மாம் என்னும் ஒரே ஒரு நேரசைதான் இருக்கின்றது.

மேற்கண்டவைகளினின்று, நேரசை நிரையசை என்னும் ஒவ்வொன்றும் நான்கு நான்கு விதமாக அமையக்கூடும் என்பது தெரியவரும்:—

நேர் அசை:—

(1) தனி நெடில்மாத்திரம் நின்று அசை ஆவது.

கா, வா, வீ, பூ, போன்றன. மொழிக்கு முதலில் மாத்திரம்வரும் ஔகாரமும், சீரிற்கு முதலில் நிற்கும் போதுமாத்திரம் ஐகாரமும், தனியாகநின்று நேரசை ஆகக்கூடும்.

(2) ஒரு நெடில், ஒன்று அல்லது இரண்டு மெய் யெழுத்துக்களை அடுத்து வருவது.

மைந், கான், வாய், வீழ்ந், பூம், போன்றன.

(3) தனிக் குறில்மாத்திரம் நின்று அசை ஆவது.

து, ச, கி, றி, வ போன்றன. சீரின்இறுதியில் மாத் திரந்தான், இவ்வாறு தனிக்குறில் ஒரு நேரசை ஆகக் கூடும்.

(4) ஒரு குறில், ஒன்று அல்லது இரண்டு மெய் யெழுத்துக்களை அடுத்து வருவது.

துண், சந், யர்ந், றிங், வல், போன்றன.

நிரையசை:—

(1) இரண்டு குறில்கள் மாத்திரம் அடுத்து நின்று அசை ஆவது:—உகு, மத, விரி, கம, போன்றன.

(2) இரண்டுகுறில்கள், ஒன்று அல்லது இரண்டு மெய்யெழுத்துக்களைத் தொடர்ந்து நிற்பது:—

உகுத், மதர்த், விரிந், கமழ்ந், போன்றன.

(3) ஒரு குறிலும் அதற்கடுத்து ஒரு நெடிலுமாக நின்று அசை ஆவது:—

படா, மதோ, கலா, உரா, போன்றன.

(4) குறிலும் நெடிலுமாக நிற்க, அதனைத் தொ டர்ந்து ஒன்று அல்லது இரண்டு மெய்யெழுத்துக் கள் வருவது:—

படாம், கலாம், உராய்ந், போன்றன.

சீர்.

இவ்வசைகளால் ஆவது சீர். ஒரு சீரில், ஒரு அசை முதல் நான்குஅசைகள் வரையில் இருக்கலாம். அதற்குமேல் இருக்காது ஆகையால் சீர்களை, ஓர சைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நான்கசைச்சீர், என நான்கு பெரும்பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

I ஓரசைச்சீர்:—ஒரே ஒரு நேரசை, அல்லது ஒரே ஒரு நிரையசை மாத்திரம் தனியாக நின்று சீர் ஆவது. இப்படிவரும் ஓரசைச்சீரைப் போதுச்சீர் எனப் பெய ரிட்டு வழங்குவர். அல்லது இதனை அசைச்சீர் என்று சொல்வதும் உண்டு. பொதுச்சீர் என்னும் பெயர் நாலசைச் சீரிற்கும் இருப்பதால், ஓரசைச் சீரிற்கு அசைச்சீர் என்னும் பெயரையே சிறப்பாகக் கொள் வோம்.

இந்த அசைச் சீர்கள், நேரசையினுலாயினும் நிரை யசையினுலாயினும் ஆகலாம். ஆகையால் அசைச்சீர், நேரசைச்சீர் நிரையசைச்சீர் என இருவகைப்படும்.

அசைச்சீர், செய்யுளிற்கு முதலிலாயினும் இடை யிலாயினும் வருவது மிகஅருமை. வெண்பா, என்னும் செய்யுளில் அதன்கடைசிச் சீராகவே பெரும்பாலும் வரும்:—

எதிரதாக் காக்கு மறிவினர்க் கில்லை
அதிர வருவதோர் நோய்.

இங்கு, நோய் என்னும் நேரசை வெண்பாவின் ஈற்றில் ஒருசீராய் நிற்கின்றது.

உளபோன் முகத்தெவன் செய்யு மளவினற்
கண்ணோட்ட மில்லாத கண்

இங்கு, கண் என்னும் நேரசை, வெண்பாவின் ஈற்றில் ஒரு சீராய் நிற்கின்றது.

பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

இங்கு, யுள என்னும் நிரையசை, வெண்பாவின் ஈற்றில் ஒரு சீராய் நிற்கின்றது.

நனவினு னல்காரை நோவர் கனவினற்
காதலர்க் காணு தவர்.

இங்கு, தவர் என்னும் நிரையசை, வெண்பாவின் ஈற்றில் ஒரு சீராய் நிற்கின்றது.

II ஈரசைச்சீர்.

இரண்டு அசைகளால் அமைந்த சீரிற்கு இயற்சீர் எனப் பெயர்; இதனை ஆசிரிய உரிச்சீர் அல்லது ஆசி ரியச்சீர் எனவும் வழங்குவர்.

இயற்சீர் நான்குவகை யாதல் கூடும்:—

(1) இரண்டு அசையும் நேரசையாக இருப்பது:—

போமோ, போந்தேன், தேர்ந்த, வாய்ப்புண், கண்ட, சென்றே, நின்றேன்,—போன்றன.

(2) இரண்டு அசையும் நிரையசையாக இருப்பது:-

விரிதிரை, கருங்கொடி, புதுமலர், இடங்கொடல், கடாவிய, படமிதோ, கடாஞ்சொரி, கடாங்கலுழ், நடாத்தினன்—போன்றன.

(3) இரண்டு அசைகளில், முதலசை நேராகவும் மற்ற அசை நிரையாகவும் இருப்பது:—

கண்பொழி, புண்படும், நற்கணை, பூந்துகில், பூம் புகார், தீஞ்சுவை, மாய்ந்தனன்,—போன்றன.

(4) இரண்டு அசைகளில், முதலசை நிரையாகவும் மற்ற அசை நேராகவும் இருப்பது:—

அதுவோ, கிழமை, மதர்த்தான், ஒழுங்கு, கலாஞ் செய், கலாபம்,— போன்றன.

ஆதலின் இயற்சீர், நேர்நேர் நிரைநிரை நேர்நிரை நிரைநேர், என நான்கு வகையாதல் காண்க.

யாப்பிலக்கண நூல்களில், இந்த நான்கையும், தேமா, கருவிளம், கூவிளம், புளிமா, என்னும் வாய்ப் பாடுகளால் குறிப்பர்:—

தேமா:—என்னும் இது தே-மா, என்னும் இரண்டு நேரசைகளைக் கொண்டிருப்பதால், இரண்டு நேரசை களைக்கொண்ட இயற்சீரைத் தேமாச் சீர் என்னலாம்.

கருவிளம்:—என்னும் இது, கரு-விளம், என்னும் இரண்டுநிரையசைகளைக் கொண்டிருப்பதால், இரண்டு நிரையசைகளைக் கொண்ட இயற்சீரைக் கருவிளம் சீர், என்னலாம்.

கூவிளம்:—என்னும் இது, கூ-விளம், என்ன, முத லில் நேரசையும் பின்னர் நிரையசையும் கொண்டிருப் பதால் இவ்வண்ணம் வரும் இயற்சீரைக் கூவிளஞ் சீர் என்னலாம்.

புளிமா:—என்னும் இது, புளி-மா, என்ன முத லில் நிரையசையும் பின்னர் நேரசையுங் கொண் டிருத்தலால், இவ்வண்ணம் வருகின்ற இயற்சீரை, புளிமாச் சீர் என்னலாம்.

கீழ்வருஞ் செய்யுளில் உள்ள ஈரசைச் சீர்கள் அமைந்து வருமாறு காண்க:—

கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவா
ளூட்குடையா ளூரா ணியல்பிணை—ளூட்கி
யிடனறிந் தூடி யினிதி னுணரு
மடமொழி மாதராள் பெண்.

(கட்கினியாள், வகைபுனைவா, ளூட்குடையா, என் னும் இம்மூன்று சீர்களும் மூவசைச் சீர்கள். அவைகளைப் பின்னர்க் கற்போம்—ஈற்றுச் சீர் பெண் என்பது ஓரசைச்சீர். மற்றவை யெல்லாம், ஈரசைச் சீர்கள்).

காதலன்:—கா-தலன் = நேர்நிரை = கூவிளம்.
காதல்:—கா-தல் = நேர்நேர் = தேமா.
ளூரா:—ளூ-ரா = நேர்நேர் = தேமா.
ணியல்பிணை: —ணியல்-பிணை = நிரைநிரை = கருவிளம்.
ளூட்கி:—ளூட்-கி = நேர்நேர் = தேமா.
யிடனறிந்:—யிட-னறிந் = நிரைநிரை = கருவிளம்.
தூடி :—தூ-டி = நேர்நேர் = தேமா.
யினிதி:—யினி-தி = நிரைநேர் = புளிமா.
னுணரு:—னுண-ரு = நிரைநேர் = புளிமா.
மடமொழி: —மட-மொழி = நிரைநிரை = கருவிளம்
மாதராள்:—மா-தராள் = நேர்நிரை = கூவிளம்.

நால்வகை இயற்சீரும் வருகின்ற இந்தச் செய்யுளை மனப்பாடம் செய்துவைத்துக்கொளல் நலம்.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[107-வது பக்கத் தொடர்ச்சி]

2. நகரச் சருக்கம்.

64. பெருமக னுருகும் பெண்மை
மாண்பினும் பேணி நாளும்
மருவினும் புதிய போலு
மழலையங் கிளவி யாலுந்
திருமகள் புலமை யாக்குஞ்
செல்வியென் றிவர்கள் போல
இருவரு மிறைவ னுள்ளத்
தொருவரா யினிய ராளுர். 30.

பெருமகன் - அரசன், உருகும் - (காண்டோறும் நினைக்குந்தோறும்) உருகும்படி அமைந்த, பெண்மை- பெண்மையினது, மாண்பினும் - சிறப்பினாலும், நாளும் - எப்பொழுதும், பேணி - ஆசையோடு, மரு வினும் - பழகினாலும், புதியபோலும் (கேட்குந்தோ றும்) புதியனபோல் (அவனுக்கு இன்பம் விளைக் கின்ற), மழலை அம் கிளவியாலும் - அழகிய மழலைச் சொற்களாலும், திருமகள் - இலக்குமி, புலமை ஆக் கும் செல்வி - அறிவு உண்டாக்கும் தெய்வமாகிய ஸரஸ்வதி, என்ற இவர்கள் போல - என்னும் இவர் களைப் போல, இருவரும் - அவ்விரு தேவிமாரும், இறைவன் உள்ளத்து - அவ்வரசனது மனதில், ஒருவ ராய் - ஒரே தன்மையராய் (ஏற்றந்தாழ்வின்றி) இனி யர் ஆனர் - இனியவர் ஆயினர்.

பொருட்செல்வம் கல்விச்செல்வம் இரண்டும் இன்பத்திற்கு இன்றியமையாதன ஆகுமாறுபோல் இருமனைவியரும் அரசனுக்கு இன்பம் பயப்பதில் ஒரே தன்மையராயினர்' என்று கொள்ளல்வேண்டுமே யல்லாது, ஒருத்தி திருமகள் போன்ற அழகினாலும் மற்றையவள் கலைமகள் போன்ற சொற்களாலும் மன்னனை யின்புறச்செய்தனர், என்றுகொண்டக்கால், கல்வியிலொருத்தியும் அழகினிலொருத்தியும் மற்ற வட்குத் தாழ்ந்தவளெனும் குறிப்பிற்கு இடமாகும்.

———

65. மன்னவ னாவி யாவார்
மகளிரம் மகளிர் தங்க
ளின்னுயி ராகி நின்றா
னிறைமக னிவர்க டங்கட்
கென்னைகொ லொருவர் தம்மே
லொருவர்க்கிங் குள்ள மோட
முன்னவன் புணர்த்த வாறம்
மொய்மலர்க் கணையி னானே. 31.

மகளிர் - அவ்விருதேவியரும், மன்னவன் - அரச னுக்கு, ஆவி ஆவார் - உயிர் போன்றவராயினர். அ மகளிர் தங்கள் - அந்த மாதர்க்கு, இறைமகன் -வேந் தனும், இன்உயிர் ஆகி நின்றான் - இனிய உயிர் போன்று இருந்தான். அ மொய் மலர் கணையினான்

அவன் - அடர்ந்த புஷ்ப பாணங்களேயுடைய அந்த மன்மதனுகிய அவன், இவர்கள் தங்கட்கு - இவ்விரு திறத்தார்க்கும், ஒருவர் தம்மேல் ஒருவர்க்கு இங்கு உள்ளம் ஓட - ஒருவர்மே லொருவருக்கு மனம் செல்லும்படி, முன் - முற்காலத்தில், புணர்த்த ஆறு - சேர்த்த விதம், என்னை கொல் - என்னவோ!

---

66. சொற்பகர்ந் துலகங் காக்குந்
தொழில்புறத் தொழிய வாங்கி
மற்பக ரகலத் தானை
மனத்திடைப் பிணித்து வைத்தார்
பொற்பகங் கமழப் பூத்த
தேன்துணர் பொறுக்க லாற்ருக்
கற்பகக் கொழுந்துங் காம
வல்லியங் கொடியு மொப்பார். 32.

அகம் - உள்ளிடத்தில், கமழ - வாசனை வீசும்படி, பூத்த-மலர்ந்த, பொற்பு - அழகுடைய, தேன் துணர்-தேன்நிறைந்த பூங்கொத்தின் பாரத்தை, பொறுக்கல் ஆற்ரு-தாங்கமுடியாத,கற்பகம்-கற்பக விருக்ஷத்தின், கொழுந்தும்-இளந்தளிரையும், காமவல்லி அம் கொடியும் - அழகிய காமவல்லிக்கொடியையும், ஒப்பார் - ஒத்தவர்களான அத்தேவியர்; சொல் பகர்ந்து-சொல் உரைத்து,உலகம் காக்கும் - உலகத்தைக் காக்கும், தொழில் புறத்து - தொழில் ஒன்றைத்தவிர, ஒழிய வாங்கி - மற்றவைகளொன்றிலும் செல்லாமல் இழுத்து, மல் பகர் அகலத்தானை -மற்போர் தரவல்ல மார்பினையுடைய அம்மன்னனை, மனத்துஇடை - தம் மனத்தினிடத்தில், பிணித்துவைத்தார் - கட்டிவைத்திருந்தார்.

சொல் பகர்ந்து உலகம் காக்கும் தொழில்:—சேனையும் மற்ற அங்கங்களேயும் பிரதானமாகக் கொண்டு இவன் தன்தேயத்தை ஆள முயன்றிலன். சொல் லொன்றே போதும் தேயத்தைத் தன்வழி நடத்தற்கு, என்பது கருத்து. தொழில் புறத்து ஒழிய - அத் தொழிலிற்குப் புறமான, அதாவது அத்தொழில் தவிர மற்றவைகள். ஒழிய - வினையாலணையும் பெயர். ஒழி பகுதி, அ பலவின்பால் விகுதி - ஒழிந்தன, - மற்றவைகள். இங்கு ஏழ னுருபும்பயனு முடன் தொக்க தொகை. அல்லது, ஒழியவாங்கி, என்பதற்கு, ஒழிந்தனவற்றினின்று விலக்கி, எனப்பொருள் கொண்டால் ஐந்தன் தொகைஆகும்.

கொழுந்தும் கொடியும் அணைய நொய்யவர், மல்பக ரகலத்தானைத் தம் மனத்திடைக் கட்டிவைத்தது விந்தையன்ரே எனக் கவி வியக்கின்ருர். இராஜ்யகாரியத் திலமர்ந்த நேரம்தவிர மற்றப் போதெல்லாம் இவ்விரு மனைவியர்க்கேஉரியவனுயிருந்தான்இவ்வரசன்.ஏமாங் கதத் தரசன் சச்சந்தனைப்போல் இவன் காமத்தால் குடியோம்புங்காரியத்தைக் கைவிட்டிலன் என்றுரைப் பதோடு தேவியர்மாட் டிவனுக் கிருந்த கழிபேரன்பையும் இச்செய்யுள் தெரிவிக்கின்றது.

---

67. மங்கைய ரிருவ ராகி
மன்னவ னொருவ னுகி
யங்கவ ரமர்ந்த தெல்லா
மமர்ந்தருள் பெருகி நின்ருன்
செங்கயன் மதர்த்த வாட்கட்
தெய்வமா மகளிர் தோறுந்
தங்கிய வுருவந் தாங்குஞ்
சக்கரன் றகைமை யானுன். 33.

மங்கையர் இருவர் ஆகி - மனைவியர் இரண்டு பேர் ஆகி, மன்னவன் ஒருவன் ஆகி - (அவர்களுக்கு) நாயகன் ஒருவன் ஆகி, அவர் அமர்ந்தது எல்லாம் - அவர் விரும்பியபடி யெல்லாம், அமர்ந்து - (தான்) நேர்ந்து, அருள் பெருகி நின்ருன் - அன்பு பெருக இருந்தவனுகிய பயாபதியரசன், செம்கயல் - சிவந்த கயல்போன்ற, மதர்த்த - களித்த, வாள்கண் - ஒளி பொருந்திய கண்களுடைய, தெய்வ மா மகளிர் தோறும் - தெய்வத்தன்மை பொருந்திய சிறந்த மாதர்கள் ஒவ்வொருவரிடத்தும், தங்கிய - (இன்புற) தங்கிய, உருவம் தாங்கும் - பல உருவங்களைத் தாங்கும், சக்கரன் - திருமாலின், தகைமை ஆனுன்-தன்மையை உடையவன் ஆயினுன்.—அங்கு - அசை.

அமர்தல், என்பது முதலில் விருப்பம் என்னும் பொருளிலும், பின் மேற்கொள்ளல் என்னும் பொருளிலும் வந்தது. இவ்விரு பொருள்களுக்கும் ஆதாரம் முறையே'வருவிருந் தமரும்' என்றும் 'ஆடலமர்ந்தானமர் வெய்யோன்' என்றும வரும் பண்டைநூற் பிரயோகங்களிற் காணலாம்.

பயாபதிக்கு இங்குக் கண்ணனை யுவமையாகக் கவி கூறுகின்ருர். பதினுருயிரம் தேவிபரும் அவர்களிற் சிறந்தோர் உருக்குமணி சத்தியபாமா என்றிருவர்களும் கண்ணனுக்கிருந்தும்அவ்வொவ்வொருவர்க்கும் ஒவ்வொரு உருவங்கொண்டு ஒரே சமயத்தில் அவன் தோன்றிய காரணத்தால், மிகாபதி சசி என்றிருவர் சிறந்தவாராக ஆயிரம் தேவிமார்களேயுடைத்தாய் எல்லாரும் விரும்பியபடி நேர்ந்து நடக்கும் பயாபதி அக்கண்ணனை ஒத்தான். உவமையணி.

மகளிர்தோறும்— என்பதில் தோறும் என்பது சாதாரணமாய் இரண்டிற்கு மேற்பட்ட எண்ணைக் குறிப்பதாகக்கொண்டோம். பற்று, மங்கையர் இருவராகி என்றதால், சக்கரன் என்றதற்குச் சீதேவி பூதேவி இருவர்க்கும் ஒத்த அன்பினனுன திருமாலென்றேயும் கொள்ளலாம்.

சக்கரன், என்பதற்கு இந்திரன் என்ருெரு பொருளுளதேனும் அது இங்குப் பொருந்துதற் கிடமில்லை.

---

68. முற்றுநீர் வளாக மெல்லா
முழுதுட னிழற்று மூரி
யொற்றைவெண் குடையி னீழ
லுலகுகண் படுப்ப வோம்பிக்
கொற்றவ னெடுங்க ணுர்தங்
குவிமுலைத் தடத்து மூழ்கி
மற்றவர்க் கரச செல்வ
மின்னண மமர்ந்த தன்றே. 34.

கொற்றவன் - அரசன், நீர் முற்றும் வளாகம் எல்லாம்-(கடல்) நீர் வளைந்த இடமெல்லாம், முழுது உடன் நிழற்றும் - முழுவதும் சேர நிழலைத்தரும், மூரி - வலிமை பொருந்திய, ஒற்றை வெண் குடையின் நீழல் - ஒப்பற்ற வெண்குடையினது நிழலிலே, உலகு - ஜீவராசிகளெல்லாம், கண்படுப்ப - அமைதியுடன் தங்கும்படி, ஓம்பி - (அவைகளைக்) காத்தும், நெடும் கண்ணுர்தம் - அகன்ற கண்களையுடைய தேவியர்களது, குவிமுலை - குவிந்த முலைகளால் வரும் இன்பமாகிய, தடத்து-குளத்தில், மூழ்கி - அமிழ்ந்து திளைத்தும் (வாழும்), அவர்க்கு - அவர்களுக்கு, அரசசெல்வம் - சிறந்த செல்வம்; இன்னணம் - கீழ்

வரும் வகையில் (புத்திரப்பேறுண்டாகி), அமர்ந்தது-பெருகியது—மற்று, அன்றே - அசைகள்.

முற்றுதல் - சூழ்தல், வளாகம் - சூழப்பட்ட இடம். மூரி - பழையவென்றும் கூறலாம். அமர்தல் - இங்கு மிகுதியாதல்.

குவிமுலைத் தடத்து மூழ்கி-மூழ்கி என்னும் வினைக் கேற்பத் தடம் என்பதற்குக் குளம் என்றும், முலைத் தடம், என்பதை மூன்றனுருபும்பயனு முடன்தொக்கத் தொகையாகவும் கொண்டு, இன்பம் என்றதை அவாய்நிலையாகப் பெற்றேம். தடம், என்பது மலையாயின் மூழ்கி என்னும் வினைபொருந்தாது.

நகரச்சருக்கம் முற்றிற்று.

———

முன் இங்கு உரை வரையாதுவிட்ட செய்யுளிற் குப் போதிநாயகனூர்ச் சென்னியப்ப கவிராயரவர்கள் பின்வரும் உரையை எமக்கு எழுதி அனுப்பியிருக்கின்றார்.

சூளாமணி—பாயிரம்—1வது செய்யுள்.

அங்கண் உலகிற்கு அணிவான் சுடராகி நின்றான்
வெங்கண் வினைபோழ்ந் திருவைச் சரண்சென்ற [மேனாட்
பைங்கண் மதர்வைப் பகுவா யரியேறு போழ்ந்த
செங்கண் ணெடியான் சரிதமிது செப்ப லுற்றேன்.

இதன்பொருள்:-அம்-அழகிய, கண் - இடமகன்ற, உலகிற்கு - உலகத்திற்கு, அணி - அழகிய (ஆபரணம் போன்ற), வான் - சிறந்த, சுடர் ஆகி - காந்திபொருந்திய (சூரியனைப்போன்று), நின்றான் - நிலை பெற்றவராகிய, (24 தீர்த்தங்கரருட் 11ம் தீர்த்தங்கரராகிய சிரேயான் சுவாமிகள்), வெங்கண் - (தன்னடியார்களது) கொடிய, வினை - தீவினைகளை, போழ்ந்து - அழித்து; இருவு - (தன்னடியார்களை முத்திநிலையிலே மூழ்கி) இருக்கும்பொருட்டு; ஐ - அழகிய; சரண் - (சமவசரண் என்னும்) ஆலயம்; சென்ற - அடைந்த, மேல் நாள் - முற்காலத்திலே; பைங்கண் - பசியகண்களையும், மாதர்வை - வலிமைக்களிப்பையும், பகுவாய் - (சினத்தால்) திறந்தவாயையு முடைய, அரியேறு-ஆண்சிங்கத்தை, போழ்ந்த-பிளந்து கொன்ற, செங்கண் - சிவந்த கண்களையும், நெடியான் - நீண்ட (பெருமைக்குணத்தையுமுடைய), திருமாலெனப் படுகின்ற திவிட்டனது, சரிதம் இது - இந்தச் சரித்திரமாகிய (காவியத்தை), செப்பலுற்றேன்-சொல்லத்துடங்கினேன்.

மேற்கண்ட செய்யுட்கு மேற்சொன்னபடி 3-வது அடிக்கு உரை செய்வதல்லாமல்;—பைங்கண்-பசிய கண்களையும்; பகுவாய் - பிளந்தவாயையும் (உடைய); மதர்வை - மதம் பொருந்திய (யானையை), போழ்ந்த-கொன்ற, அரியேறு - ஆண் சிங்கத்தைப் போன்று வலிமை மிகுந்த, செங்கண் நெடியான்.........(மேற் சொன்னபடி):—

குறிப்பு:—உலகத்தின்கண் ஆயிரங் கிரணங்களையுடைய சூரியன் அந்தகாரத்தை நீக்குவதுபோல், தீவினையாகிய அறியாமையை நீக்கி முத்தியடைவிக்கும் பொருட்டு 11-ம் தீர்த்தங்கரராகிய சிரேயான் என்பவர் சமவரசணத்தை அடைந்தகாலத்தில் சிங்கத்தைப் பிளந்திட்டவனான திவிட்டனது சரிதம் கூறத் தொடங்கினேன். (அல்லது)பைங்கண் பகுவாய் வேழத்தைக் கொல்லக்கூடிய - சிங்கத்தைப் போன்று வலிமை மிக்கவனான திவிட்டனது சரிதம் என்னும்:—இந்நூலிற் கூறப்படும் பொருள் இன்னதென்னும் இது கவிக் கூறிற்று:—

இதற்கு உதாரணம்:—

மீனேறுயர்த்த கொடிவேந்தனை வென்ற பொற்பின்—தானேறனையானுளன் சீவகசாமியென்பான்—வானேற நீண்ட புகழான் சரிதமிதனைத்—தேனூற நின்று தெருண்டாரவை செப்பலுற்றேன்—'என்னும் சிந்தாமணிப் பதிகச்செய்யுளோ டொப்பிடுக:—

தீர்த்தங்கரர் கடவுளின் அவதாரபுருஷர். இவர் பிறரால் உபதேசிக்கப் பெறாமலே, எல்லா உண்மைப் பொருள்களையும் அறிந்தவர். யாவராலும் துதிக்கப் படுவர்:—

சமவசரணம் என்பது ஜைனர்களுடைய ஆலயம். இவ்வாலயத்தியல்பை மேருமந்தரபுராணத்தில்பரக்கக் காணலாம். 11-ம் தீர்த்தங்கரராகிய சிரேயான் என்பவர் சமவசரணம் சென்றடைந்த காலத்தில் திவிட்டன் சிங்கத்தை வென்றகதை(சூளாமணி 7வது சீயவதைச் சருக்கத்தில்) கூறப்பட்டிருக்கிறது.

வள்ளுகிர் மதர்வைத் திபங்கட் குழவிவா ளெயிற்றுப் பைங்கண்—உள்ளெரியுமிழ நோக்கி யுருமென வதிரும் பேழ்வாய்க்—கொள்ளரி யுருவு கொண்டான் கொடியவன் கடிய சூழ்ந்தான்;—என்று சீயவதைச் சருக்கத்தில் சொல்லப்பெற்றிருக்கிறது.

வான்சுடராகி நின்றான் என்பதுபோல—; மலர்தலையுலகின் மல்கிருளகல - இலகொளி பரப்பி யாவையும் விளக்கும் - பரிதியி னெருதா னாகி; என்ற நன்னூற் சிறப்புப் பாயிரத்தும்;—திங்கள் மூன்றடுக்கிய திருமுக் குடைக்கீழ் - செங்கதிர் ஞாயிற்றுத் திகழொளி சிறந்து - என்ற சிலப்பதிகாரங் கொண்டும்;'வெம்புஞ் சுடரிற் சுடருந் திருமூர்த்தி' என்ற சிந்தாமணியைக் கொண்டும் காண்க:—

(சுடரென்னும் ஒளியின் பெயர், அதனையுடைய சூரியனுக்குப் பண்பாகுபெயர்) (ஆகி - உவம உருபு). (பைங்கண் - பசுமை+கண்; ஈறு போதல் எனும் சூத்திரவிதி). (மதர்வை—மதர்வு+ஐ. ஐ சாரியை); அல்லது (பார்வை என்பதிற்போல மதர் +வை; வை விகுதி யென்றுமாம்) (பகும்+வாய்—வினைத்தொகை)

புதுவருடச் சந்தா பணத்தை வி. பி-க்குக் காத்திராது மணியார்டர் மூலம் அனுப்பி வைக்குமாறு நேயர்களைக் கேட்டுக் கொள்கின்றோம். புதிய ஆண்டு முதல் வி. பி.களை மூன்று நாட்களுக்குமேல் தபால்நிலயத்தார் வைத்துக்கொள்ள மாட்டார்களாதலால், மணியார்டர் செய்து சந்தாவைச் செலுத்துவது எமக்கு மிகவும் உதவியாக விருக்கும். வி. பி. அனுப்ப நேருங்கால், தாமதம் செய்யாது பணம்கட்டிப் பத்திரிகையை ஏற்றுக்கொள்ளும்படி நேயர்களை வேண்டிக்கொள்கின்றோம்.

மானேஜர்.

அப்பர்

அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்.

18. அக்கினி ஸ்தம்பனம்.

[104-வது பக்கத் தொடர்ச்சி]

இயற்கைத் தத்துவசாஸ்திரம் காட்டும் தீயின் குணங்களும் காந்தத்தின் ஆட்சியும்

தீயானது இயற்கையில் மேல்நோக்கிக் கொழுந்து விட்டு எரியும் தன்மையது. இதில் முக்கோண வடிவமுள்ள கரியதோர் உட்பிரதேசமும் இதற்குப் பொன்னிறமுள்ள மேலங்கிபோன்ற கவசமும், அக் கவசத்தின்பேரில் நிறமென்பது செவ்வனே காணப் படாததோர் படபடப்பான மேலோட்டமுடைய மேற் போர்வையும் ஆகமூன்று பாகங்களிருக்கின்றனவென இயற்கைத் தத்துவ சாஸ்திரிகள் கூறுவர். இவற்றுள் மேலே நிறமற்று விளங்கும் போர்வையே தீயின் குணத்தை விளக்குவதாகும். மற்றைய விரண்டிற் பொன்னிறமுள்ளது கரித்துகள் உஷ்ணத்தால் எரிய ஆரம்பிக்கும் நிலையென்றும் அதன் உஷ்ணத்திற்கு ஆதரவானது நிறமற்ற வெளிபாகம் எரிப்பென்றும் கூறுவர். உட்பிரதேசத்தில் யாதொரு உஷ்ணமும் தீயின் தன்மை கொடுக்க இயல்வதில்லை. ஏனெனில் தீயை நிலைநிறுத்தும் பிராணவாயு உட்பிரதேசம் அணுகுவதற்கு முன்னமே பொன்னிற அங்கியும் மேற்கவசமும் அதைக் கவர்ந்து உண்டுவிடுவதால் உட்பிரதேச வாயுக்கள் வெளிவந்தாலன்றித் தீயாக மாறாவாம். ஆகையால் உட்பாகம் கனத்தும், வெளிப் பாகம் மிகவும் இலேசாயும், மத்தியபாகம் இவ்விரண் டின் மத்திமமாயும் விளங்குமென்று இயற்கைத்தத் துவ நூலார் கூறுவர்.

எனவே, தீயானது பலர் எண்ணுவதுபோல் ஒரு குணமன்று, அதுவும் பொருளேயாம். ஆனால் அதன் அணுத்திரள்களானவைமிகவும் சூக்குமநிலையடைந்து பிராணவாயுடன் சம்பந்தம்செய்யும் தன்மை மிகுந்து மிருக்கும். அவை மேற்கூறிய மூன்று கூறுப் பிரிந்து ஒன்றன்பின் ஒன்றாய் முடிவில் பிராணவாயு சம்பந் தத்தால் எரிந்து அப்பொருளின் காட்சி மாறும். அவ் வாறு மாறும் நிலைக்கு முன்னருள்ள நிலைகளின் யாக்கை மாறாமல் பெரும்பாலும் நிலையாய் நிறுத்தி வைப்பதையே அக்னிஸ்தம்பனக் கலையென நம்மே லோர் கூறுவர். அக்னியின் கரும்பிரதேசமும் தீ யெ ரிந்துகொண்டிருக்கும்போது வெளியிற் கொண்டு வரலாமென்றும், இத்தீயை அணைக்காமலே அதனி டத்துள்ள சத்தை வேறிடத்திற்கு எடுத்துச்சென்று மற்றொரு தீமூட்டிக் காட்டலாமென்றும் இச்சாஸ் திரிகள் கூறுகின்றனர். வீசம் அங்குலமுள்ள ஒரு சிறு குழாவை ஒருஅடி துண்டித்து ஒரு முனையை எரியின் கரிய பிரதேசத்தில்வைத்துச் சற்றுப் பிடித்திருந்தால் மற்றொரு முனையில் ஒரு வகைப் புகை வெளிப்படும். அதில் தீயின் கொழுந்து படுமாயின் அம்முனையா னது ஒருவிளக்குப்போல் எரிந்துகொண்டே நிற்பதை யும் காணலாம். தாய்த்தீ நிற்கும் வரையில் இவ்விளக் கும் எரியும்-ஒருவிளக் கன்று, இம்மாதிரி பல விளக் குக்களையும் நாம் செய்து காட்டலாம்.

ஆகையால் எரியில் இத்தகைய உட்பிரதேசத்தில் தேக தத்துவத்தில் பிராணவாயு ஸ்தம்பன மாக்கித் தேகத்திற்கு வெளியில் தோலின்மேல் நீராவி கவச மாய் நிற்க அக்னிபயமின்றி, யாதொரு தீங்குமின்றி ஒரு மனிதன் நிற்கலாம். இதுவே தவசிகள் “எழுநா மத்தியிடை” நின்று சருகுபட்சணம் செய்து பல நூற்றாண்டுகள் கோரதவம் செய்வரென்றும் புராணங் கள் கூறுவதாம். இது ஞானத்துடன் கூடினாலன்றி முத்திப்பயன் தாராதென்று தாயுமானவர் கூறுவர்.

பத்திநெறி நிலைநின்று நவகண்ட பூமிப்
பரப்பை வலமாக வந்தும்
பரவையிடை மூழ்கியும் நதிகளிடை மூழ்கியும்
பசிதாக மின்றி யெழுநா
மத்தியிடை நின்றுமுதிர் சருகுபுனல் வாயுவின
வன்பசி தனக்க டைத்தும்
மௌனத் திருந்துமுயர் மலைநுழை தனிற்புக்கு
மன்னுதச நாடி முற்றும்
சுத்திசெய் தும்மூலப் பிராணனோ டங்கியைச்
சோமவட் டத்தடைத்தும்
சொல்லரிய வமுதுண்டு மற்பவுடல் கற்பங்க
டோறுநிலை நிற்க வீறு
சித்திசெய் துஞ்ஞான மலதுகதி கூடுமோ
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மையா னந்த குருவே.

இவ்விதமாக அறிவுநூல் மொழிந்தவண்ணம் அக் கினியைக் கட்டி நின்றநிலையில், ஞானமும் அப்பருக் குச் சம்பந்தப்பட்டதால் எரியின் குணமே மாறிய தென்பர் மேலோர். எரியானது காந்தசக்தியால் குணம் பலவாறாகுமெனத் தற்காலஇயற்கைத் தத்துவ ஆராய்ச்சி செய்து ஸீமான் (Zeeman) முதலானோர் கண்டுபிடித்தவை இன்றும் வெளியாகின்றன. மனிதர் தேகம் சரிவர உபயோகப்படுத்தப் படுமாயின், இது ஒரு பெரிய காந்தக் கோட்டையாகும். ஜடபதார்த்த மான காந்தம் எரியை ஒரு வகையிலே ஆட்டுமென் றால், சித்துப்பொருள் சம்பந்தமான மனிதக் காந்த மானது எரியை எவ்விதமாகவேனும் திருப்பியாட்டக் கூடுமென்பது ஆன்றோர் துணிவு.

திருஞானசம்பந்தருடன் சென்ற திருநீலகண் டத்துப் பாணனர் ஓமகுண்டத்திற்கு அருகில் இடம் பெற்றபோது ஓமாக்கினியானது பெருஞ்சுடரினைக் கொடுத்து விளங்கியதென்று பெரியபுராணம் கூறும். எனவே திருநீலக்கண்டத்து யாழ்ப்பாணர் தேககாந்த மானது அவ்வெரியை இழுத்து விளக்கிய தென்ன லாம்.

இயற்கையில் அக்னியை நமது தேகத்தில் உற்ப விக்கத்தக்க காந்தசக்தியாய் அடக்கியாளலாமென் பது திண்ணம். அச்சக்தியாலே பதிவிரதாசிரோ மணிகள் அதை அடக்கின ரென்பதற்குப் பற்பல உதாரணங்களும் உள. ஆண்மக்களும் சிலராய்ப் பரி

சுத்தமுடையோ ராஞல் அக்னியை ஒரே இடத்தில் நிறுத்தவும் பரவச்செய்யவும் சுருக்கவும் வெளிப் படச் செய்யவும் கூடுமென்பதே நமது சாஸ்திரங் களின் கொள்கையுமாம். இச்சக்தி சிவஞான சம்பந்த மாயின் என்றும் சலனமற்றுத் திண்ணமாய் நன்மை யே விளக்கும்.

தீரன் தீத்திர னன்சடை தாங்கிய
நீர னுடிய நீற்றன் வண்டார் கொன்றைத்
தாரன் மாலையன் றண்ணறுங் கண்ணியன்
வீரன் வீழி மிழலை விகிர்தனே.

திருவீழிமிழலை - திருக்குறுந்தொகை.

தூயவன்கா ணீறு துதைந்த மேனித்
துளங்கும் பளிங்கனைய சோதியான்காண்
தீயவன் காண் தீயவுணர் புரஞ்செற் றான்காண்
சிறுமான் செங்கையெம் பெருமான் றான்காண்
ஆயவன்கா ணாரூரி லம்மான் றான்காண்
அடியார்கட் காரமுத மாயினுன் காண்
சேயவன்காண் சேமநெறி யாயினன் காண்
சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன் றானே.

திருச்சிவபுரம் - திருத்தாண்டகம் 5.

திருநாவுக்கரசுநாயனுர் பஞ்சேந்திரியங்களை யடக்கி யாண்டதுபோல், பஞ்ச பூதங்களையும் தன்வபப்படுத் தும் தன்மை பெற்றவரென்பதற்கு அவர் பாசுரங் களிற் சில அத்தாட்சிகள் காண்க:—

மாற்றே னெழுத்தஞ்சு மென்ற னுவில்
மறவேன் றிருவருள்கள் வஞ்ச நேஞ்சில்
ஏற்றேன்; பிறதெய்வ மெண்ணு நாயே
னெம்பெருமான் றிருவடியே யெண்ணி [னல்லால்
மேற்றுனீ செய்வனகள் செய்யக் கண்டு
வேதனைக்கே யிடங்கொடுத்து நாளு நாளும்
ஆற்றே னடியேனை யஞ்சே லென்னு
யாவடுதண் டுறையுறையு மமர றேறே.

திருவாவடுதுறை-திருத்தாண்டகம் 2.

கைம்மான மதக்களிற்றை யுரித்தான் றன்னைக்
கடல்வரைவா னுகாச மானுன் றன்னைச்
செம்மானப் பவளத்தைத் திகழு முத்தைத்
திங்களை ஞாயிற்றைத் தீயானனை
எம்மானை யென்மனமே கோயி லாக
விருந்தானை யென்புருகு மடியார் தங்கள்
அம்மானை யாவடுதண் டுறையுண் மேய
வரனடியே யடிநாயே னடைந்துய்ந் தேனே.

மெய்யானைப் பொய்யரொடு விரவா தானை
வெள்ளடையைத் தண்ணிழலை வெந்தீ யேந்தும்
கையானைக் காமனுடல் வேவக் காய்ந்த
கண்ணானைக் கண்மூன் றுடையான் றன்னைப்
பையா டரவுமதி யுடனே வைத்த
சடையானைப் பாய்புலித்தோ லுடையான் றன்னை
ஐயானை யாவடுதண் டுறையுண் மேய
வரனடியே படிநாயே னடைந்துய்ந் தேனே.

திருவாவடுதுறை- திருத்தாண்டகம். 7,8.

தீயானது பாவம் விரவும் ஜீவராசிகளுக்குத் துன் பம் விளைவிக்கும் பூதமாயினும் அவனருளில் மூழ் கிய பரிசுத்தருக்குக் குளிர்ந்த பூதமேயாகும். இதற் குச் சான்று சிவன் சொரூபமே தீயாகிய திருமேனி யென்பதும் அத்திருமேனி யின்பமும் குளிர்ச்சியும் பெற்றதென்ற நமது சமயகுரவர்களின் கூற்றுமாம்:-

தீக்கூருந் திருமேனி யொருபான் மற்றை
யொருபாலு மரியுருவந் திகழ்ந்த செல்வர்
ஆக்கூரிற் றான்றோன் றிப் புகுவார் போல
வருவினையேன் செல்வதுமே யப்பா லெங்கும்
நோக்கா ரொருவிடத்து நாலுந் தோலுந்
துதைந்திலங்குந் திருமேனி வெண்ணீ றாடி
வாக்கான் மறைவிரித்து வாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே.

திருவலம்புரம் - திருத்தாண்டகம் 3.

ஆரழ லுருவ மாகி யண்டமேழ் கடந்த வெந்தை
பேரொளி யுருவி னானைப் பிரமனு மாலுங் காணச்
சீரவை பரவி யேத்திச் சென்றடி வணங்கு வார்க்குப்
பேரரு ளருளிச் செய்வார் பேணுமாப் பாடி யாரே.

திருவாப்பாடி - திருநேரிசை 9.

எரியலா லுருவ மில்லை யேறலா லேற லில்லை
கரியலாற் போர்வை யில்லை காண்டகு சோதி யார்க்குப்
பிரிவிலா வமரர்கூடிப் பெருந்தகைப் பிரானென் றேத் [தும்
அரியலாற் றேவியில்லை யையனை யாற னார்க்கே

திருவையாறு - திருநேரிசை 5.

இத்தகைய சிவசொரூபம் தியானத்தின் மாட்சிமை யாய்த் தன்னைச்சுற்றி நிற்கும்போது அத்தீ யெவ்வாறு இயங்குமென்பது அப்பர் தம் அநுபவத்தால் வெளி யிடுவது காண்க:—

நெருப்பி னுற்குவித் தாலொக்கு நீள்சடை
பருப்ப தம்மத யானை யுரித்தவன்
திருப்ப ராய்த்துறை யார்திரு மார்பினுல்
பொருப்ப ராவி யிழிபுனல் போந்ததே. 7.

நெருப்பராய் நிமிர்ந்தா லொக்கு நீள்சடை
மருப்ப ராய்வளைந் தாலொக்கும் வாண்மதி
திருப்ப ராய்த்துறை மேவிய செல்வனார்
விருப்ப ராயிருப் பாரை யறிவரே. 9.

திருப்பராய்த்துறை-திருக்குறுந்தொகை.

கலா நிலயத்தின் வளர்ச்சியைக் கருதி நமது துணை ஆசிரியர் ஸ்ரீமான் K. ராஜகோபாலன் அவர்கள் 1931-வருடம், மார்ச்சு மாதம் 4-ந் தேதி புதன் கிழமை ரசுலா என்னும் கப்பலில் மலாய் நாடுகளுக்குப் பிரயாணமாவார். அக் காலை, அவரது கருமம் செவ்வனே முற்றும்படி இயன்றன செய்து எமக்கு உதவிதருமாறு கலா நிலய நேயர்களையும், மற்றத் தமிழ் அன்பர்களை யும் கேட்டுக்கொள்கின்றேம்.

ஆசிரியர்.

உலகுக்கு வேண்டாதார் யாவர்!

[Joseph Addison]

[18-வது நூற்றாண்டில் வாழ்ந்த அடிசன் என்னும் ஆங்கிலப்புலவன் 'ஸ்பெக்டேடர்' என்னும் பத்திரிகையில் எழுதிய கட்டுரையொன்றின் கருத்தைத் தழுவிய மொழிபெயர்ப்பு வருமாறு:]

அறிவுஅறிவு என்னும்பேரால் நிகழும் அவலச்செய்திகளைப்போன்றதொரு தீமையை நான்எங்குங் கண்டிலேன். எனினும் அந்தத்தீமையே மாந்தரிடைச் சாதாரணமாய் வளர்ந்துவருகின்றது. எல்லாநிலை மாந்தரிடத்தும், இருபாலார் மாட்டும், இத்தீமை புகுந்துவிட்டது. சாமர்த்தியசாலி யென்றும் அறிவினாற் சிறந்தவனென்றும் தான் போற்றப்பட வேண்டுமென முயல்வதேயல்லாது,நல்லவனாய்ச் சத்தியவானாய் வாழவேண்டுமென்று விழையும் மனிதனொருவனைக் காண்பது முயற்கொம்பாயது. யோக்கியனாய் இருப்பதைக் காட்டிலும் புத்திசாலியாகவும், நல்லவனாயிருப்பதைக் காட்டிலும் சாமர்த்தியசாலியாகவும் விவகரிக்க முயல்வதுமல்லாமல் அப்படியே தாம் இருப்பதாகவும் நடிக்கின்ற பொய்வேடங்கள்தான் உலகவாழ்க்கையில் அடர்கின்ற சிறுமைகளுக்கெல்லாம் மூலகாரணம் ஆகும். வாழ்க்கைநலம் துறந்திழிந்த சாமர்த்தியசாலிகளின் கட்டுரைகளும் அவர்களைத் தொடர்ந்து அம்முறையில் பழகும் மற்றவர்களின் கட்டுரைகளுமே இக்கபடநாடகத்தைஅரங்கேற்றி ஆட்டிவைக்கின்றன. "புத்திசாலித்தனம் அறிவின்முதிர்ச்சி சொல்வன்மை முதலிய திறமைகளைப் பெற்றுள மாந்தர்களே தூக்குமரத்திற்கு ஏற்ற பாத்திரங்கள்" என்று ஸர். ரோஜர் கூறியதும் இதுபற்றியேதான்.

மதிவளம்வாய்ந்த இப்புத்திசாலிகள் தமது சொல்லும் திறத்தினால், சொல்வதற்கு அஞ்சவேண்டியவைகளைக் கூசாது கூறிவிடுகின்றனர். அன்னோர் தம் ஆன்மாவின் தூண்டுதலைப் பொருட்படுத்துவது இல்லை. இவ்வழி பயின்றுபயின்று தழும்பேறிய நாக்கு மற்றவரிடை இருக்குங் குற்றங்குறைகளைக் கூற நாணுமோ! கெடுமதியினோடு கொடிய வலிமையும் வாய்ந்தவனைவிடத் துஷ்டன்சிருஷ்டியில் வேறுஇல்லை. அத்தகையான் தன்னின் ஒருபாதி மாய்ந்துஅழுக அரைவாழ்வே வாழ்பவன். சுகவாழ்க்கையிலும் பொருளின்பத்திலும் அவன் ஆசையுள்ளவனாய் இருக்கலாம் என்றாலும், நல்லொழுக்கம் மெய்ந்நட்பு தகைமாண்பு அனைய குணநலங்களனைத்தையும் அவன் இழந்தவனே யாகின்றான்.

தன் கால்ஒன்றைத் தானே ஊனம்செய்துகொண்டு அதனைக் காட்டிக்காட்டிப் பிச்சையிரக்கும் புல்லோன் ஒருவனைவிடப் பலபடி இழிந்தவர்களே சாமர்த்தியசாலிகள். பிச்சைக்காரன் தன் பசிக்குப் பிடிசோறு பெற்றுண்டு உறங்கவே இரக்கின்றான். உடலூறு விடாய் தீர்ந்தவுடன் திருப்தியும் அடைந்துவிடுகின்றான். தனது அவசியப்பொருள்களையும், உடலின் விழைவையும், கிடைக்கின்ற அளவிற்குள் அடக்கிக்கொண்டு திருப்திஎய்துபவன் துஷ்டன் ஆகமாட்டான் என்பார் ஸர். ரோஜர். மேலும் சொல்லுவார்:—

"சமுகத்தின் யோக்கியதையும் நல்லஒழுக்கங்களும் சாமர்த்தியசாலிகளாற்றான் கெடுகின்றன. அவர்கள் தங்கள்வரையில் என்னவேண்டுமானாலும் தேடிக்கொள்ளட்டும், நாம் குறையொன்றும் கூறவேண்டுவதில்லை. ஆனால் அவர்கள் தாங்கள் செய்வன பெருமைக்குரியன வென்று எல்லாரும் கருதிக் கொண்டாடும்படி காரியச் சூழ்ச்சிகள் செய்தமைக்கின்றார்களே! இதனால் பாமரப் பொது ஜனங்கள் அவர்களைப் பின்பற்றுகின்றனர். வேறென்! பொதுஉலகத்தின் நலமெலாம் சிதைகின்றது……"

நமக்கு வேண்டுவது, ஒருபாகமும் மாயாத முழுமனிதர்கள். அவர்கள்தான் நல்லவர்கள். ஒருவன் சொல்பவைகளும் செய்பவைகளும் பொதுஜனங்கள் உயரவும் நல்வாழ்வுவாழவும் வழிகாட்டியாக இருக்கவேண்டும். அப்படி நல்வாழ்க்கைக்கு உதவாதவன் முழுமனிதன் ஆகான்.

மனம்போனபடியெல்லாம் புரிய இயல்வதே நல்லதோர் வாழ்வாகாது. ஒவ்வொரு காரியத்தையும் செய்யுமுன் 'இது நல்லதா, கெடுதி விளைக்கக்கூடியதா' என்று சீர்தூக்கியே துணியவேண்டும். ஆனாலோ இந்நாளில் எல்லோரும் கெட்டிக்காரராகவே இருக்க விரும்புகின்றனர். மற்று, கெட்டிக்காரனோ நல்லவனாயிருக்கக் காணோம். சாமர்த்தியத்தை மனிதனுடைய பெருமைக்கு அடையாளமாக நாம் கொண்டாடுவதே இதற்குக் காரணமாகும்.

'என்ன காரியம் செய்கின்றோம்' என்பதைப் பற்றி நாம் சிந்திப்பயில்லை. 'ஒரு காரியம் எப்படிச் செய்யப்படுகின்றது' என்பதே நமது கருத்தாயிருக்கின்றதே."

நல்ல சுவையும் நல்ல மனமும் உடைய மனிதரோ செய்யும் காரியத்தைக் கருதுவாரே யல்லாது செய்யப்படுமுறையின் திறமையைக் கண்டு மருளமாட்டார். "கெட்டிக்காரர் என்று சொல்லிக்கொள்ளும் துஷ்டர்கள் இழிவான துறைகளில் கலைத்தெய்வத்தை ஆழ்த்திவிடுவார்களே என்று அஞ்சி, அத் தெய்வமகளை அப்பொய்யர்கைப் படாது காக்கவே நான் செய்யுள் எழுதும் வேலையை மேற்கொண்டேன்" என்று எனது நண்பர் ஸர். ரோஜர் அடிக்கடி சொல்வதுண்டு. பொதுநலவேலையில் முற்பட்டுப் பொதுஜனங்களின் மதிப்பினிற்கு உரியராவார் தீதிலா வழித்துணைவர்களாய் அமைந்து ஜனங்களை நல்லவர்களும் யோக்கியர்களும் ஆக்கி வாழ்விக்க முயலாது, ஆற்றலை தோற்றும்படி ஆரவாரம் செய்வார்களாயின், அவர்களது மதிவன்மைக் கேற்றபடி நாடெல்லாம் நலங்கெட்டே யழிந்துவிடும். மாதருக்கு அடக்கமும், ஆடவருக்கு யோக்கியதையும் இல்லாதுபோயின் சமுகம் இழிந்து குலைந்துவிடும். பிறகு நல்லவாழ்வு என்பது எது என்பதும் மாந்தர்க்குத் தெரியவியலாது போய்விடும். 'கௌரவமுடைய இங்கிலாந்து' என்று பேரெடுத்த நமது நாடு இன்று சாமர்த்தியத்திலேயே நாட்டங்கொண்டுபெருங்கேடு அடைந்துவருகின்றது.

[18-வது நூற்றாண்டில் அடைந்துவருகின்றதென்று அடிஸன் சொன்ன கேடு 20-வது நூற்றாண்டில் முதிர்கின்ற விதங்களை G. K. செஸ்டர்டன் என்பவர், "வெற்றியெனும் குதர்க்கம்" என்னும் கட்டுரையில் காட்டியிருக்கின்றார். இது, (1928.) வால்யூம் 1, 431, 453-வது பக்கங்களில் மொழிபெயர்ந்து வந்திருக்கின்றது.—ஆசிரியர்]

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[111-வது பக்கத் தொடர்ச்சி]

(புலன்கள் - Perception)

காது

ஒலிப்புலனைப் பற்றி இனி ஆராய்வோம். ஒலியானது நம்முட் புகுவதற்கு வாயிற்படியாக விளங்குவதே செவிப்பொறியாகும். வள்ளைப் பூப்போலத் தலையின் இருபுறத்தும் தோன்று முறுப்பினை மட்டும் "காது" என்று உலக வழக்கில் வழங்கி வருகின்றோம். ஆனல் சேவிப்போறி இக்காது மட்டும் அன்று; அஃது உள்ளே மண்டைக்குள்ளும் சென்று விளங்குகின்றது. அச்செவிப்பொறி மூன்று பிரிவுகளாக விளங்குகிறது. புறச்சேவி, இடைச்சேவி, உட்சேவி, என்று அவற்றை வேறு பிரித்து வழங்குவோம்.

வெளியே தோன்றும் காதும், அதனுள் செல்லும் துளையும் புறச்செவியெனப் பெயர் பெறுகின்றன. இக் காதும் புறச்சேவிக் குழையும் மண்டைக்கு உள்ளே போய் முடிகின்றன. அசைதோல் (Vibrating membrane) ஒன்று உள்ளே உண்டு. அதற்குச் சேவிப்பறை என்று பெயர். அதுவே புறச்செவியின் உள் எல்லை.

இப் புறச்செவிக்குள்ளாக இருக்கும் பிரிவுக்கு இடைச்செவி என்று பெயர். அதற்குப் புறவெல்லையாக இச் செவிப்பறை விளங்குகிறது. உள் எல்லையாகச் சிறியதோர் என்புச்சுவர் திகழ்கிறது. இவ்விரண்டெல்லைக்கும் இடையே சிறிய என்புகள் மூன்று ஒன்றோடொன்று பிணைந்து தொடர்போல் விளங்கிச் செவிப்பறையையும் அவ்வென்புச் சுவரையும் பிணைக்கின்றன. செவிப்பறையில் ஒட்டிக்கிடக்கும் சிற்றெலும்பானது கொல்லனது சம்மட்டிபோன்ற வடிவுடையது; ஆதலின் அதனைச் சம்மட்டி என்பு என வழங்குகின்றனர். இதனது கைப்பிடியே செவிப்பறையில் ஒட்டிக்கிடக்கின்றது. அச் சம்மட்டியின் நடுவே முருந்து எலும்பு அதனைக் இறுகப் பிடித்துக்கொண்டிருக்கிறது. இச்சம்மட்டியென்பின் தலைப்புறம் இரண்டாவது என்பிற்குள் பொருத்தமுற்று விளங்குகின்றது. கொல்லன் தனது உலைக்கூடத்தில், காய்ச்சிய இரும்புப்பொருள்களை வைத்துச் சம்மட்டியால் அடிக்கும் மேடை யொன்று உண்டன்றோ? அதனைப் பட்டடைக்கல் என்று இது காலை வழங்குகின்றனர். அப்பட்டடை வடிவினதாக இவ்விரண்டாவது என்பு தோன்றுகின்றமையால் இதனைப் பட்டடை என்பு என மேனுட்டார் வழங்குகின்றனர். இப்பட்டடை என்பு மூன்ருவது எலும்பில் ஒட்டிக்கிடக்கின்றது. குதிரைமேல் ஏறுவார் படிபோல் மிதித்து ஏறுவதற்கு அக்குதிரையின் விலாப்புறத்தே, பிறை பொதிந்த இரும்பு கோர்ச் சட்டம் ஒன்றைத் தொங்கவிடுவது வழக்கம். இதில் காலைவைத்து ஊன்றித் தாவிக் குதிரை மேல் ஏறுதல் வேண்டும். இறங்குதற்கும் அதுவே வேண்டும். குதிரையேறு காற்படியினைத் தமிழர் படி, சுவடு, பக்கறை என வழங்குவர். (பிங்கலந்தை—திவாகரம்) கொல்லனுலைக்கூடத்தில் காணப்படும் சம்மட்டியும், பட்டடையும் இடைச்செவியில் தோன்றுவதுபோலக் கொல்லன் செய்யும் இப் பக்கறையும் அங்கே விளங்குகின்றது. நாம் மேற்கூறிய மூன்ருவது எலும்பு, இந்தப் பக்கறை வடிவின தாகத் தோன்றுகின்றமையால் அதனைப் பக்றை என்பு என வழங்குகின்றனர். இவ்விடைச் செவியின் உள்எல்லையாக உள்ள என்புச் சுவரில் இரண்டு துளைகள் உள்ளன. ஒன்று வட்ட வடிவினது; ஆதலின் வட்டப்புழை எனப் பெயர் பெறும்; மற்றொன்று முட்டை வடிவினது ; ஆதலின் முட்டைப் புழை யெனப் பெயர் பெறும். ஒவ்வொரு புழையையும் உட்டோல் மூடிக்கிடக்கின்றது. பக்கறை என்பின் பிறைவளைவின் இரு முனையும் முட்டைப்புழையின் உட்டோலில் ஒட்டிக்கிடக்கின்றன. வெளி ஒலியால் செவிப்பறை அசையுமானல், அதனோடு ஒட்டியுள்ள, என்புத்தொடரும் அசையும்; அவ் வென்புத்தொடர் அசையும்போது முட்டைப் புழைத்தோலும் அசைகின்றது. இடைச்செவியானது சிறு குழைவடிவாக, வாயின் பின்புறத்தே வந்து முடிகின்றது.

இவ் விடைச்செவிக்கும் உட்புறத்தே விளங்குவது தான் உட்செவி. அவ்வுட்செவி, சுற்றுச் சுழற்சி வடிவாக அமைந்துள்ளது. அங்கே மூன்று வளையங்கள் சிக்கிக் கிடக்கின்றன. அவையே அதன் பின்புறம். அவையே நிலைப்புலப் பொறியாக விளங்குவதனைப் பின்னர்க் காண்போம். ஆனல் முன்புறத்தேயுள்ளவை தான் ஒலிப்புலப்பொறிக்கு உயிரிடமாகும். முட்டைப்புழைக்கும் வட்டப்புழைக்கும் அடுத்தாற்போல இரண்டு உண்டை வடிவமான பிதுக்கங்கள் தோன்றுவதால் இடையே ஒருபள்ளம் தோன்றுகின்றது. இஃது உட்செவியின் ஒரு பிரிவு. மற்றொரு பிரிவு நத்தையோடு போல விளங்குகிறது. பிரிகயிற்றுத் தலைமுடிபோல உள் புரையாகவும் அடியில் அகலமாகவும், மேற்போகப்போக அகலம் குறைந்து நுனியில் சிறுத்துப் போகவும் சுற்றினுற்போல ஈது விளங்குகின்றது; ஆதலின் அதனைப் புரிமுடி (Spire) எனலாம். இப்புரிமுடியின் உட்புறமானது நெடுக்கே மூன்று பிரிவுகளாகப் பிரிந்து விளங்குகின்றது. இம் மூன்று குழைகளிலும் நீர்ப்பொருள் நிரம்பியுள்ளது. அடுத்தடுத்துள்ள இம்மூன்று குழைகளும் அடியிலிருந்து நுனிவரையிலும், அந்தப்புரிமுடி போலவே சுற்றிச்சுற்றி மேற்செல்கின்றன. இவற்றிலே ஒரு குழையானது முட்டைப் புழையினின்றும் வருகின்றது; ஆதலின் அதனை முட்டைப் புழைக்குழை எனலாம். மற்றொன்று வட்டைப் புழையின்நின்றும் வருகின்றது; ஆதலின் அதனை வட்டைப்புழைக்குழை எனலாம். புரிமுடியின் நுனியில் இவ்விரண்டு குழைகளும் ஒன்ருகக் கலக்கின்றன. மூன்ருவது குழையோ, இவ்விரண்டையும்விட மிகமிகச் சிறிய்து. புரிமுடிக்குழல் என இதனை வழங்கலாம். இதனது

மேற்புறத்தோல் இக்குழலினை முட்டைப் புழைக் குழையின்நின்று வேறு பிரிக்கின்றது; இதனது கீழ்ப் புறத்தோல் இதனை வட்டப்புழைக் குழையினின்றும் வேறு பிரிக்கின்றது.

இதன் கீழ்ப்புறத் தோலில்தான் கோல் வடிவமான நரம்பமைப்புகளும் மயிர்க்கரு வைப்புகளும் உள்ளன. இவையே ஒலித்தூண்டலால் தாக்குண்பன. இவையே செவிப்புல நரம்போடு தொடர்புபட் டுள்ளவை. ஒலி யலையானது புரிமுடியினுள்ளேசெல்லும்போது,இவை அவ்வலைக்கேற்ப அசைந்து நரம்புக்கிளர்ச்சியை உண்டு பண்ணுகின்றன. புரிமுடியின் அடிப்புறத்திலிருந்து நுனிவரை, இம்மயிர்கள் சிறுகச்சிறுக முறையே நீண்டுகொண்டு வருகின்றன. ஒலியால் அசையக் கூடிய தட்டைக்கம்பிகள் பலவற்றைப் பலவகையாக ஓரிடத்தே நிரலே புதைத்துவைத்து, வேவ்வேறு வகையான ஒலிகளை எழுப்புவோமானால், ஒவ்வோர் ஒலி ஒவ்வொருவகையான கம்பிகளை அசைப்பதைக் காண்போம். அவ்வாறே, வெவ்வேறு ஒலியலைகள் இயங்கும்போது வெவ்வேறு நீளமான அம்மயிர்க் கரு வைப்புகளும் இயங்குகின்றன. ஒலியலைகளின் உயர்ச்சிக்கேற்றவாறு, இம்மயிர்களின் நீளமும் வேறுபட்டு விளங்குகின்றது என்றபடி.

மேனுட்டார் Molecule என்பதனை நாம் துகள் என்றும், Atom என்பதனை நாம் நுண்துகள் என்றும் வழங்குவோமாக. வடநூலார் இவற்றை முறையே அணு என்றும் பரமாணு என்றும் வழங்குவர். துகள் என்பதற்கு இவ்வாறு சிறப்புப் பொருள் கூறினமையின், தூள் என்பதைக் குறிக் கப் பொடி தூசு முதலிய சொற்களைப் பயன்படுத்திக் கொள்வோமாக. தூள்களின் அசைவே ஒலி யலை யாகும். மொழிமுதற் காரணமா மணுத்திரள் ஒலி' என்று நன்னூலார் கூறுவதும் காண்க.

உலகத்துப் பொருள்கள் மூன்று நிலையாகக் காணப் படுகின்றன. கெட்டிப் பொருள் (Solids) ஒழுக்குப் பொருள் (Liquid) ஆவிப்பொருள் (Gas) என்ற இவற்றின் துகளசைவாலும், கம்பி தோல் முதலி யன முன்னும் பின்னுமாக உள்துகள்கள் மட்டு மன்றிப் பொருள்முழுதும் அசையும் முழுவசை வாலும் ஒலியலைகள் எழுகின்றன. ஒலி எழும் கருவி களைத் தமிழர், தோற்கருவி துளைக்கருவி நரம்புக் கருவி கஞ்சக்கருவி, என வகைசெய்தனர். பொருள் களின் முழுவசைவால் எழும் ஓசைஎன்றும் துகள் அசைவால் எழும் ஓசைஎன்றும் வகுக்கலாம். வளைந்து கொடுக்கும் பொருள்களோ, முழுதும் அசைந்து ஒலியை எழுப்புகின்றன. நரம்புக்கருவி, பறைபோன்ற தோற்கருவி முதலியன இவ்வகையால் ஒலி எழுப்புவனவாம். இசைக் கம்பிகளின் (Tuning forks) ஒரு முனை புதைக்கப்பட்டிருப்பதால் ஒருமுனைதான் அசையும். யாழ் முதலியவற்றின் நரம்புகளோ இருமுனையும் கட்டப்பட்டு விளங்கு கின்றன. ஆதலின் அவற்றின் அசைவெல்லாம் அவ் விருமுனைக்கும் இடையேதான் எழுகின்றன. பறை யிலோ தோலைச்சுற்றினும் ஓரத்தில் கட்டிவிட்டிருப் பதால், நடுவிடத்தில்தான் அத்தோல் அசையக்கூடும். இவ்வாறு, முழுப்பொருளின் அசைவு, ஒரு முனை யசையாகவும், இடை யசைவாகவும், வட்டநடு அசை வாகவும் விளங்குகின்றது. துகளசைவோ, பாண்டில் (தாளம்) மணி, முதலிய கெட்டிப்பொருள்களின் துகளசைவாகவும், வட்டிற்கருவி (ஜலதரங்கம்) முதலிய ஒழுக்குப்பொருள்களின் துகளசையாகவும், புல்லாங்குழல் முதலிய ஊது கருவிகள் வழியாக எழும் காற்று (ஆவிப்பொருள்) துகளசைவாகவும் விளங்குகின்றது. ஒழுக்குப் பொருள் துகளசைவு வட்டிற்கருவியிலன்றிப் பெரும்பான்மை யாகக் காணப்படுவதில்லையாதலினாலும், அவ்வட்டிற்கருவி யிலும், நீரின் அசைவோடு வட்டிலின் அசைவு உடனெழுகின்றமையானும், ஒழுக்குப் பொரும் ளினது களசைவினைப்பற்றிப் பேசாது மற்றைய இரண்டைப் பற்றியுமே பெரிதும் கூறுவர் ஆராய்ச்சி வாணர். எனவே, பொதுவாகக் கூறுமிடத்து, ஒலியின் பிறப்பிடம் மூன்றென வரையறுக்கலாம். காற்றுத் துகளசைவு கெட்டிப் பொருள்களின் துகளசைவு முழுப்பொருள் அசைவு என்று கண்டு கொள்க.

துகளசைவோ முழுவசைவோ, காற்றின் வழியா கக் காற்றசைவாகவே வந்து நம் காதை அடைகின் றது. அசைவுவடிவாம் அலைகள் நேரலைகளாகவும் குறுக்கலைகளாகவும் விளங்குவதை முன்னரேகுறித்து வைத்தோம். அவ்விருவகை யலைகளில் ஒலியலை நே ரலையின்பாற் படும்; ஒளியலைகளைப்போலக் குறுக்கலை யன்று. நீரின்இடையே கல்லை யெறிந்தால், எறிந்த விடத்தில் நீர்த்துளிகள் செறிந்து அலையாக எழுவ தனையும் பின் கரையோரமாக வரவரச் செறிவின்றி நெகிழ்ந்து ஓய்ந்துபோவதனையும் காண்கிறோம். அங் ஙனமே ஒலியலைகள் எழும்போதும், செறிவிடமும் (Place of Compression) நெகிழிடமும் (Place of rarefition) காண்கின்றோம். ஒலியலைகளின் விசை ஒரு ஊடுநிலை (medium)யில் ஒரே வகையாக வே எழுகின்றது. ஆனால் ஊடுநிலைக்கு ஊடுநிலை விசை மாறுபடும். ஊடுநிலை செறிவுடையதனால் (Density) ஒலியலை போகும் விசையும் அதற்கேற்பக் குறை கிறது; செறிவுகுறைந்த ஊடுநிலையானால் விசை மிகு கின்றது. காற்றிலே செல்லும் ஒலியலையின் விரைவினை அளந்துபார்த்தவர்கள் ஓர் இமைப்போதில் 332.4 நெடுக்கம் வரை (1000 அடி) ஒலி போகிறது என்று முடிவுகட்டியுள்ளார்கள். ஒளியலைகளைப் போல, ஒலி யலைகளும், அலையளவாலும், (Wave length) உரத் தாலும் (Intensity) வேறுபடுகின்றன. அலைகள் செல்லும்போது ஓரிடத்திற் செறிந்தும், பிறகு நெகிழ்ந்தும் மறுபடியும் செறிந்தும் செல்கின்றன. செறிந்திருக்கும் நிலையை எடுப்புநிலை (Pulsation) எனலாம். ஒலியலையின் அகலம் அதன் விசையைப் பொருத்ததன்று; ஓர் எடுப்புநிலைக்கும், மற்றோர் எடுப்புநிலைக்கும் நடுவேயுள்ள எடுப்பிடையின் அகலத்தைப் பொருத்தது.ஒலியலைகளை அளப்பதற்கு, குறித்தபொழுதிற்குள் குறித்தஇடத்தை வந்து சேரும் அலைகளின் எண்ணிக்கையையோ, அல்லது எடுப்பிடை வெளியின் அகலத்தையோ அளவையாகக் கொள்ளலாம். அலைகளின் எண்ணிக்கை மிகுந்தால், அலைகளின் அகலம் குறைகின்றது. எண்ணிக்கை குறைந்தால் அகலம் மிகுகின்றது. இவ்வாறு, எண் ணிக்கையும் அகலமும் முரணிலை இயைபுபெற்று விளங்குகின்றன.

சிற்றலை பேரலை என்றவற்றைச் சிற்றலையில் தொடங்கிப் பேரலைகள் வரையிற் படிப்படியாக உயர்ந்த பேரலைகளை முறையே அடுத்தடுத்து வைத்து நிரல்பட அமைக்கலாம். அந்நிரலும் ஒரு தொடர்ச்சி முறையாகத் தோன்றும். ஒளியலைகளைப் போலவே, இவ்வொலி யலைகளிலும் மிகச் சிறியஅலையும் மிகப் பெரிய அலையும் புலனாவதில்லை. மேலே நோக்கின் ஓரி மைப் போதில் 30,000 முறை அசையும் அலை வரை யில் உள்ள அலைகள் புலனாகின்றன. அதற்கு மேற் பட அசைபவை புலனாவதில்லை. அங்ஙனமே கீழே நோக்கின் ஓரிமைப் போதில் 16 அல்லது 12 முறை அசையும் அலைகள் வரையில் உள்ளவைதான் புலனா கின்றன. அதற்கும் கீழ்ப்பட அசைபவை நமக்குப் புலனாவதில்லை. இவ்விரண்டெல்லைக்கும் உட்பட்ட அலைகள்தாம் நமக்குப் புலனாகின்றன. ஆனால், அசை முறையால் 30000மாக வேறுபட்டு விளங்கும் அலை களைத் தனித்தனியே நாம் வேறு பிரித்தறிவதில்லை. இமைப்போதில் 12000 முறை அசையும் அலைக்கும் 12010 முறை அலைக்கும் உள்ள பல வேற்றுமையை அறிய முடியாது. ஒன்று போலவே ஒன்று தோன்று கின்றது. அத்தகைய வேற்றுமைகளை அறிவதற்குத் தகுந்தபடி நமது செவிப்புலன் நுட்பமானதாக விளங்கவில்லை.

பிஸாரோ

(Copy-right with Messrs. C. Coomaraswamy Naidu & Sons.)

ரிச்சர்ட் பிரின்ஸ்லே ஷெரிடன் எழுதிய வோர் ஆங்கில நாடகத்தின் மொழி பெயர்ப்பு

[ரிச்சர்ட் பிரின்ஸ்லே ஷெரிடன் என்பவர் 18-வது நூற்றாண்டின் இறுதியில் இருந்த சிறந்த நாடக ஆசிரியருள் ஒருவராவார். இ 1751 வருடம் பிறந்து 1816 வரை வாழ்ந்தவர். இவரது நாடகங்களில் மிகச்சிறந்த தெனக் கொண்டாடப்பெறுவது நாம் இப்பொழுது மொழி பெயர்த்துத்தரும் பிஸாரோவாகும். ஆங்கில வசனநடை நாடகம் ஒன்றை நமது நேயர்களுக்கு அறிமுகம் செய்துவைக்க வேண்டியே இப்பிஸாரோ நாடகத்தின் மொழிபெயர்ப்பைத் தருகின்றேம்.—ஆசிரியர்.]

நூன்முகம்

'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்று சொல்லியது நமது ஔவை மூதாட்டியே யாயினும் அவ்வாக்கியத்தி னுண்மையை முற்றிலு முணர்ந்து பண்டைநாள் தொட்டுப் பரிபாலனம் பண்ணிவருபவர்கள் ஐரோப்பியர்களே. ஐந்நூறு அறுநூறு வருடங்களுக்குமுன் இங்கிலாந்து, உலாந்தா, ஸ்பெயின், போர்ச்சுகல் முதலிய மேனுட்டோர், தூர தேசங்களுடன் வர்த்தகம்செய்து தங்கள் செல்வத்தை விருத்திபண்ணுவதற்காக நூதன தேசங்களையும், அந்நிய நாடுகளுக்கு நூதன மார்க்கங்களையும் கண்டுபிடிப்பதிலேயே தங்கள் சர்வ சக்தியையும் செலுத்தத் தலைப்பட்டனர். அத்தகைய முயற்சிகளுள் ஒன்றின் பலனுய்த்தான், அமெரிக்கா என்னும் புதிய கண்டமொன்று கண்டுபிடிக்கப்பட்டு, வியந்து நிற்கும், இவ்வுலகிற்குக் கொடுக்கப்பட்டது. ஐரோப்பியர்களுக்கு இக்காலம் வாய்த்திருக்கும் செல்வ மேன்மையும், அளவற்ற அதிகாரமும், அந்நாட்களில் கொலம்பஸ், வாஸ்கோடிகாமா, ட்ரேக், ராலே, போன்ற தீரமிகுந்த கடற்காரர்கள், செய்துள சாகசச் செய்கைகளின் பலனேயாம்.

எவ்வாறெனில், நாடுதேடிக் கடல்தோறு மலையும் இத்தகைய மாலுமியொருவன் கைக்குப் புதிய தேசமொன் றெட்டுமாயின், அம்மாலுமியைச் சேர்ந்த நாட்டோரிற் சிலர் தங்கள் அரசனிடமிருந்து அனுமதிச்சீட்டுப்பெற்று, வர்த்தகம் செய்வதற்காகக்கப்பல்களிற் பொருள்களேற்றி அப் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட தேசத்திற்குப்போய், அங்கே, தாங்கள் கொண்டுபோகும் பீங்கான்பொம்மை, கண்ணுடி மணி போன்ற அற்ப வஸ்துக்களுக்குப் பதில் அவ்வூர்ச் சுதேசிகளிடம் பசும்பொன் அபகரிக்கிறதுமன்றி, மெள்ள மெள்ள, தங்கள் கிறிஸ்தவ மதத்தையும் அதனுடன் தங்கள்நாட் டதிகாரத்தையும் அச் சுதேசிகள்தலையிற் சுமத்திக் கடைசியில் படைவலியாலோ அல்லது வேறு உபாயங்களினுலோ அந்நாட்டையே தங்கள் இராஜாங்க ஆதீனத்திற் குட்படுத்திவிடுவார்கள்.. இவ்விதமே முன் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தவுடன், அத்தேசத்தை ஜயித்து அதை ஸ்பானிய அரசாட்சிக்குட்படுத்தக் காரணமா யிருந்தவன்தான் இந்நாடகத்தின் நாயகனுகிய பிஸாரோ.

பிஸாரோ ஸ்பெயின் தேசத்தைச் சேர்ந்தவன். இவனது பேராண்மைக்கும் புஜபல பராக்ரமத்திற்கும் அளவில்லை. தேகபலத்திற் கேற்ற மனேதிடமும் இவனிடம் அமைந்திருந்தது. எண்ணுதற்கரிய இவனது சாகசச் செய்கைகளைக் கண்டு ஸ்பானியர் பிஸாரோவைத் தம்நாட்டுத் தெய்வங்களுள் ஒன்றுகக் கொண்டாடிவந்தனர். முன்னுரைத்த முறைப்படியே அமெரிக்காவை ஜயிப்பதற்காகப் பிஸாரோ ஒரு சிறு படையுடன் புறப்பட்டுத் தென் அமெரிக்காவிலுள்ள 'பெரு' என்னும் ஒரு நாட்டிற்போ யிறங்கினுன். அத் தேசத்துச் சுதேசிகளுக்குப் 'பெருவியர்' என்று பெயர். அவர்கள் மனேவாக்குக் காயங்களாற் செய்யக்கூடிய பாபமொன்றும் அறியா மிக்க சாது ஜனங்கள். வெகு யோக்கியர், ஸத்யஸந்தர். இத்தகைய பெருவியர்களினிடையே போயிறங்கின பிஸாரோவையும் அவன் பரிவாரங்களையும் அந்தச் சனங்கள் மிக்க மரியாதையுடனும் அன்பினேடும் இனிய விருந்தினர்களாக நல்வரவேற்று இவ் வன்னியரைத் தெய்வமாகக் கொண்டாடி, யாதுங் கரவாது தங்கள் செல்வத்தை அவர்களுடன் பங்கிட்டுக் கொண்டனர். (I. 1. 13 & 14) நன்றிகெட்ட பிஸாரோவோ இவ்வளவையும் பெற்றும் அச்சுதேசிகளை இரக்கமின்றிப் பெரிதும் வருத்திவந்தான். கையிலகப்பட்டவர்களைக் கொன்றும், சென்ற விடமெல்லாம் கொள்ளையடித்தும் பெருவைப் பாழாக்கிச் செல்ல முயலவே உண்மையில் அரக்கர்களாகிய அந்த ஸ்பானியர்களைத் தாங்கள் மனிதருக்கு மேலான தெய்வமாக மதித்து மயங்கினுரென்றுணர்ந்தி, அத்தேசத்தரசனுகிய அத்தாலிபா, பிஸாரோவை அடித்துத் துரத்தத் தலைப்பட்டான். பெருவியர் பேராண்மை பொருந்திய போர்வீரர்களெனினும், அவர்களது ஆயுதம், கத்தி ஈட்டி வில் முதலியனவே யாதலின், ஐரோப்பியரின் பீரங்கிபோன்ற தற்காலப் போர் எந்திரங்களுக்குமுன் அவர்களால் நிற்கமுடியவில்லை. வெற்றிபெற்ற பிஸாரோ, முன்னரே வரம்பு கட்டிருந்த தன் அக்கிரமக் கொடுமைகளை எத்தனையோ

ஆயிரமடங் கதிகம்செய்து பெருவையும் அவ்வூராரை யும் அடியுடன் அடையாளமற அழித்துவிட்டே மீள்வதென்று தீர்மானித்து, எமதூதர்க ளெனத்தக்க தன் படைஞர்களை அக் கொடியவேலைக்கு ஏவினன்.

இது நிற்க, நிரபராதியான இந்த ஜனங்களைப் பிஸாரோ இவ்விதம் இரக்கமின்றிப் வதைப்பதற்குக் காரணம் ஏதாகிலும் உளதோ! இயற்கையிலேயே பிஸாரோ கொடியவன், இரத்தவெறி கொண்டவன், கன்மனத்தன், ஒதுங்கிப் பாயும் பாதகன் (I. I. 2.) எனினும், உலகத்தில் நானு பக்கங்களிலும் நடந் துள்ள இதேவிதக் கொடுமைச் செயல்களுக்கு மனிதத் தனமற்ற பிஸாரோபோன்ற தலைவர்களின் துர்க்குணங் களே யன்றிப் பெரும்பான்மை அக்காலத்து ஐரோப்பி யக் கொள்கைகளும் பொறுப்புடையனவா யிருந்தன. ஐரோப்பிய மதாசார தேசாசாரங்களை அனுசரிக்காத சாதியார்—அவர்கள் சுயநாகரிகம் எவ்வளவு உயர்ந் ததே எனினும்—அக்காலத்து ஐரோப்பியர் கண்க ளுக்குக் காட்டுமிராண்டிகளாகவே தோன்றினர். அதுவுமன்றிக் கிறிஸ்தவர்க எல்லாதவர்கள் அஞ் ஞானிகள், மனித இனத்தைச் சேர்ந்தவர்களே அல் லர், அவர்களை என்ன பண்ணினும் பாவமன்று என்பது தங்கள் மதக்கோட்பாடுகளுள் ஒன்றெனும் பொய்யெண்ணம் அக்காலத்துக் கிறிஸ்தவ உலகத் தில் எங்கும் பரவியிருந்தது. (I. I. 9.) இத்தகைய எண்ணங்கள் குடிகொண்டிருந்தபடியால், அந்நிய மதத்தினர்களையும் அந்நிய ஆசாரங்களுடையவர்களை யும், மக்களில் சிலர் எக்காலத்திலும் புலி கரடிபோன்ற காட்டுமிருகங்களைச் சிறிதும் கண்ணோட்டமின்றி வேட்டையாடிக் கொல்வதைப்போல், ஐரோப்பியர் கொல்லப் புகுந்தது முற்றிலும் ஆச்சரியமன்று. செய்கைகள் எவ்வளவு கொடியதேனும் அவர்கள் நோக்கம் பெரும்பான்மை சுயநயமற் றிருந்தது. அந்நியர்களைக் கிறிஸ்தவர்களாக்குவது முற்றிலும் அவ்வந்நியர் நன்மைக்கே என்று நம்பியிருந்தபடி யால்தான் அவர்கள் இத்தகைய கொடுமைகளுக் கும் தங்கள் கடவுள் சம்மதித்துளர் என்று எண் ணியிருந்தனர். (v. i. 118). இந்நோக்கத்துட னேயே பாலஸ்தீனம் சென்று ஸரஸன் என்னும் ஜாதியாரை இவ்வித வருத்தத்திற் குட்படுத்தி இருக் கின்றனர் ஐரோப்பிய தேயத்தவர் பலர். டிப்பு சுல் தான், வெகு சமீபத்தில், கத்தி நுனியில் அனேகரை மகம்மதியர்களாக்கினனெனப் பகர்வார். டிப்புதான் அவர் கண்களுக்கு நாகரிகமற்ற துருக்கனுய்த்தோன்ற லாம். நல்லது, முன்காலத்து ஐரோப்பிய நாகரிகமும் அதனினும் இழிந்த செய்கைகளுக் கனுமதி கொடுத் ததுமன்றி அவைகளைச் செய்யவும் தூண்டி வந்தது. ஷேக்ஸ்பியர் எழுதியுள்ள "வெனிஸ் வர்த்தகன்" (Merchant of Venice) என்னும் நாடகத்தைப் படித்திருப்பவர்களுக்கு இவைகளின் உண்மை தெளிவாய் விளங்கும்.

இத்தகைய எண்ணங்கள் பிஸாரோவின் மனதி லும் ஊன்றியிருக்குமாகையால் பிஸாரோ தன் காலத் திற்குப் பின்னிடாமல் அவ்வெண்ணங்களுக்கேற்ற கருமங்களும் செய்தான். பிஸாரோ எண்ணியபடி பெருவியர் நாகரிகமற்ற காட்டுமிராண்டிகளோ ஒரு போதும் ஆகமாட்டார். அவர்கள் சிற்சில கலாசாஸ்தி ரங்கள் கற்றிருந்தனர். அவர்களது இராஜாங்கமுறை மிக்கமேன்மையானது. களங்கமற்ற மதாபிமானமும், தேசாபிமானமும் இராஜாபிமானமும் பெருவியரிடம் சிறந்து விளங்கிய பூஷணங்களிற் சிலவாகும் (II. 2. 39). குற்றமற்ற மனச்சாட்சி அவர்களது சிறந்த பொக்கிஷம். தர்மநியாய மெனும் கொத்தளங்கள் அவர்கள் கோட்டையின் எல்லாப் பாகங்களையும் காத்து நிற்கின்றன (I. 1 22). காமக்குரோதாதி களுக்கு இடங்கொடாமல் மனோவாக்குக் காயங்களில் தூய்மையும் ஸத்யமும் பொருந்தியிருப்பது நாகரிகச் சின்னமன்றெனிற்றான் பெருவியர் நாகரிகமற்றவர்க ளாவர். இத்தகைய ஜனங்களைத்தான் கொடிய பிஸா ரோ இரக்கமின்றி வதைத்தான். ஆனல் பிஸாரோ வுடன் சென்றிருந்த லஸ்கஸஸ் என்னும் ஒரு வயோ திக குரு மாத்திரம் இக்கொடுமைகளைப் பொறுக் காமல், அவைகளை விட்டொழிக்க எவ்வளவோ மானுட தர்ம நியாயங்களை எடுத்துக் காட்டிப் பிஸா ரோவிடம் மன்றாடினர். பிஸாரோ அவைகளுக்குச் செவிகொடுக்கவில்லை. எனினும் பிஸாரோவின் உயிர்த்தோழனுகிய அலான்ஸோவின் மனதில், லஸ் கஸஸ் எடுத்துக் காட்டிய நியாயங்கள் உண்மை யென்று படவே அவனும், பெருவியரிடம் இரக்கம் காட்டப் பிஸாரோவை வேண்டினன். சாமபேத தான உபாயங்களுக்குப் பிஸாரோ இணங்காமற்போகவே, அலான்ஸோ, மிக்க தருமசிந்தை யுடையவ னுகை யால், இனித் தண்டமே தக்கதெனும் உறுதிகொண்டு, முன்காலத்தில் விபீஷணன் கொடிய இராவணனைக் கைவிட்டு ஸ்ரீராமருக்கு உதவியது போலவே பிஸா ரோவை விட்டுப் பெருவியர்பக்கம் போய்ச் சேர்ந்து, இயற்கையிலேயே சுத்தவீரர்களான பெருவியசைனி யத்தை ஐரோப்பிய முறையிற் பழக்கி, பிஸாரோவி னிடமே அவன் போர்த்தொழில் பழகியுளனுதலின், பிஸாரோவின் படையைக் குலைத்து, தன்னுயிர் தப்பி னுற்போதுமென அவன் பெருவைவிட்டு ஸ்பெயின் தேசம் மீளும்படி துரத்திவிட்டான். இவ்விதம் அவ மான மடைந்து ஊர்திரும்பிய பிஸாரோ, தன்னிடம் கற்ற அலான்ஸோவினுலேயே தனக்குற்ற தோல்வி யை எண்ணியெண்ணிக் கோபம் பற்றியெழ அலான் ஸோமீது எவ்விதத்திலும் தான் பழிதீர்க்காது விடுவ தில்லை யென்று சபதம்செய்து, கூடிய விரைவினில் இன்னெருதரம் பெருவின்மேற் படையெடுத்துச் செல்வதற்குவேண்டிய முயற்சிகள் செய்யலாயினன்.

(தொடரும்)

நோயற்ற :: :: வாழ்வே | ஆரோக்கிய வாழ்க்கைக்கேற்ற இரு அருமருந்துகள் | குறைவற்ற : : செல்வம்

"ஸித்தகல்ப மகரத்துஜம்"

(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளை நீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம்மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்றாத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபக சக்தி பெறவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூபா **10**

"மஹா சந்தனாதித் தைலம்"

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபக சக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி, கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக்கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும் பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா **5**.

உங்கள் நரம்புகளையும், தேகத்தையும் பலப்படுத்தவும், ஞாபக சக்தியைப் பெறவும், நோய்களிலிருந்துவிடுதலையடைந்து ஆரோக்கிய சுயராஜ்யத்தைப் பெறவும் சுலபமான வழி,

ஆயுர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் N. V. ஸ்ரீ ராமாசார்லு அவர்களின்

இணையற்ற ஔஷதங்களிலேயே இருக்கின்றது. அவைகளை உபயோகித்து இன்ப வாழ்வு நடத்தச் சிறிதுந் தயங்காதீர்கள்.

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட் சென்னை.

தபால் பெட்டி 151, சென்னை. கேட்லாக் இனாம். தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A. B.L. ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

இனாம்! இனாம்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனா பஜார், மதராஸ்.

அரசாங்க இஞ்சினியர்களால் மதிக்கப்பெற்ற

மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் ::
:: அதன் அநுபவப் பயிற்சி முறையும்

முதல் பதிப்பு விலை ரூபா 1. இரண்டாம் பதிப்பு 50 படங்களுடன் 200 பக்கங்கள் விலை ரூபா 2. தபால் சார்ஜு வேறு. வெளிநாடு ஆர்டர்களுக்கு முன்பணம் அனுப்பவேண்டும். ஏஜண்டுகள் தேவை.

எங்கள் மோட்டார் ஸ்கூல் 1916ஆ ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெகானிஸம் கற்றுக்கொடுத்துக் கவர்ன்மெண்டலைசென்ஸும் பாடசாலைச் சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தென்னிந்தியா
மோட்டார் இஞ்சினீரிங் ஒர்க்ஸ் & பாடசாலை,
மைலாப்பூர் :: சென்னை.

Estd. NATIONAL **1906**
INSURANCE COMPANY LIMITED.
Head Office:-**9, Old Court House St., Calcutta.**

Before taking out a life assurance policy it is better to apply all the rigid tests for a good company.

The "National" will surpass any other Company in these tests.

(1) Indian Capital-Indian Management-for the benefit of Indians.
(2) The Company has never contested a claim on a technicality.
(3) The low safe rates of premium provide maximum assurance at minimum cost.

The "National" keeps well ahead of the times and its policy of 'fair and square dealing' which began with its founding, ever since 1906, has been continuous.

For Particulars & Agency terms.
Apply to :— R. G. DAS & CO., *Managers.*
T. ANANTACHARI, B.A.,
Branch Secretary.

NATIONAL INSURANCE COMPANY LTD.,
Madras Branch, Loane Square,
Broadway, Madras.

Write for Particulars.

Agents Wanted Eevery - where.

— லோத்ரா —

ஸ்திரீகளுக்கு
மகிழ்ச்சியையும்
ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —

ஜுரத்தைப் போக்கும்

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.

எழும்பூர். :: :: சென்னை.

அசோகா சால்ட்

(ரிஜிஸ்டர்ட்)

(அசோகா உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுக்கவும் அசோகா உப்பு ஓர் அரிய மருந்து.

உணவை நன்ருகச் செரிக்கச்செய்து யாதொரு வருத்தமின்றி நாள்தோறும் மலத்தைக்கழிக்கும் சிறந்த குணமுடையது.

அஜீர்ணம், பித்தவாயு, புளி ஏப்பம், குலை எரிச்சல், வயிற்றுவலி, குன்மம், மார்புவலி, இடுப்புநோய், தலைமயக்கம் முதலிய நோய்களை நீக்க வல்லது. பாண்டு, சோகை, காமாலை, ஜுரம், மகோதரம், அஜீர்ணம், பேதி, கணைச்சூடு, வெட்டைச்சூடு, மூலம், கரப்பான், சிரங்கு, குடல் கிருமி, மலச்சிக்கல், போன்ற நோய்களைப்போக்கி எவ்விதப் பிணியும் அணுகாமல் காக்கக் கூடியது அசோகா உப்பே யாகும்.

விலை ரூ **1-8-0** தபால்செலவு வேறு.

அசோகா கம்பெனி,
லிமிடெட், சென்னை.

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம் வாசனைகளால் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி-வீசை ரூ-4. ஷை சாதா ரகம் பொடி வீசை ரூபா 3½. டாக்டர் B. S. மல்லையா M. B, & C.M., & M.L C. அவர்கள் பரிசோதித்த R.S. சுகந்த மூக்குத்தூள் விலை பாட்டில் 1-க்கு அணா 4. டஜன் ரூபா 2¼ ஷை ஒரு சேர்டின் ரூபா 1¾ வி பி. ரயில் சார்ஜ் வேறு.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
நெ. 44 கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.
தந்தி விலாசம் "நஸ்யம்"

ராமுலு—13

		Rs.	As.
1.	ஸங்கீத சிந்தாமணி	3	0
2.	திராவிட கானம்	3	0
3.	ஸங்கீத சில்லரைக்கோர்வை	3	0
4.	கீர்த்தன ரத்னங்கள்	1	4
5.	சங்கீதத் திருப்புகழ்	0	8
6.	ராஜேந்திர மோஹனு	1	0
7.	திகம்பர சாமியார் பால்ய லீலைகள் ...	5	0
8.	ரமாமணி	2	0
9.	சரோஜனி	2	0
10.	வசீகரண தந்த்ரம்	2	0
11.	அநுபவ சிந்தாமணி	1	0
12.	Kissing in Practice	2	0
13.	Fruits of Married Love	0	12

காலண்டர், கேட்லாக் இனும்!

M.S. ராமுலு & கம்பெனி, ராயபுரம், மதராஸ்.

33 வருஷங்களாக உலகப்பிரசித்தி பெற்றுவரும்

வைத்ய ரத்ன பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின்

ஜீவாமிருதம் (ரிஜிஸ்டர்ட்)

இதைத் தினந்தோறும் போஜனத்தின் பின் இரண்டுதரம், முறைப்படி சாப்பிட்டுவந்தால், பலஹீனம், மலபந்தம், தலைவலி, நரம்புத்தளர்ச்சி, ரத்தமின்மை, ரக்த சோகை, அஜீர்ணம், ஆமாசம், மனச்சோர்வு, ஞாபகமின்மை, தூக்கமின்மை, பசியின்மை முதலியவைகளைப் போக்கி, சரீரத்தில் மிகுந்த சுத்த ரக்த ஓட்டத்தையும், மிகுந்த வலிவையும், நிறைந்த ஆரோக்கியத்தையுங் கொடுத்து வாழ்க்கையை இன்பமுறச் செய்வதுடன் தசைகளை வலுப்படுத்தி, வீர்யத்தை பெருகச் செய்கின்றது.

கேட்லாக் இனும்.] விலை புட்டி 1-க்கு ரூ. 3-4-0. எல்லாவிடங்களிலும் கிடைக்கும். [ஏஜண்டுகள் தேவை.

ஆயுர்வேதாஸ்ரமம், 151, கோவிந்தப்பநாய்க்கன் வீதி, தபாற் பெட்டி நெ. 287, மதராஸ்.

(1898-ல் ஸ்தாபிக்கப்பட்டது.)

டெலிபோன் நெ. 2191. தந்தி விலாசம், "பண்டிட்"

அருமையான பொடி! 32 தங்கமெடல்கள் பரிசுபெற்ற உடனே ஆர்டர் செய்யுங்கள்!!

பட்டணம் பொடிக்களஞ்சியம் பட்டணம்பொடி

காரம், மணம், குணம், சுகம், நிறம், வாடை இவை ஆறும் அமைந்துள்ளது.
விலை விபரத்திற்கு எழுதுக.

பட்டணம் பொடிக்களஞ்சியம்,
147, கோவிந்தப்ப நாயகன் தெரு, மதராஸ்.

தபால் பெட்டி, நெ:—156

புரோப்ரைடர்:— ஷண்முக முதலியார் பௌத்திரர்,
R. K. ஜெயராம் முதலியார்.

சமையல் - -
சுகம் - -
வேண்டுமானல்

ருக்மணி
குக்கர்
வேண்டும்

இது நாடறிந்த விஷயம். அனுபவசாலிகள் தம் செயலைப் பின்பற்றி நீங்களும் ஒரு அடுக்கு வாங்குங்கள்.

1, 2, 4, 6, 8, 12, 16 பேர்களுக்குரிய ஏழு அடுக்குகள் ரூ. 12, 16, 20, 25, 31, 37, 44.
விபர புத்தகம் இனம்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
இராயப்புரம் (12) சென்னை.

நம்பிக்கையுள்ள - - - ஔஷதம்

அஜீரணம், மலச்சிக்கல், தேக அசதி, ஞாபகக்குறைவு, நரம்புகளின் தளர்ச்சி முதலிய வியாதிகளுக்கு எங்கள்

ஆதங்க நிக்ரஹ
மாத்திரைகள்

நம்பிக்கையுள்ள ஔஷதம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துக் குணத்தை யடைந்திருக்கிறார்கள். நீங்களும் உபயோகித்துக் குணத்தை யடையுங்கள்.

32-மாத்திரைகளடங்கிய
டப்பி 1-க்கு விலை ரூ. 1

கேட்லாக் இனம்!

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
சென்னை.

வித்வான் த. சண்முக கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங்கள் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

உயர்ந்ததும், சிறந்ததுமான மூக்குக் கண்ணாடிகள் வாங்குவதற்கு உத்தரவாதமுள்ள இடம் இதுவே.

விலைகள் சரசம், புதுமாதிரியான கண்ணாடிகள் எப்பொழுதும் கைவசமிருக்கின்றன. மாணவர்களுக்கு ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும். விலை விபரத்திற்கு எழுதுக.

எம். ஏ. சாரி அண்டு கோ., மூக்குக்கண்ணாடி வியாபாரிகள், நெ. 9. பிராட்வே, சென்னை.

என். ஜே. தேசாய்ஸ்

உயரிய உத்திரவாதமுள்ள
கஸ்தூரி
மாத்திரையையே
எப்பொழுதும் உபயோகியுங்கள்.
ஆண், பெண், குழந்தைகளுக்கு
இன்றியமையாத
ஓர் சிறந்த டானிக்
250 மாத்திரை கொண்ட
புட்டி அணா 6. டஜன் ரூபா 3.
தபால் கூலி இனம்.

24-மணி நேரத்தில் ஆச்சரிய குணம்!!!
உயரிய உத்திரவாதமுள்ள
சர்வ படை மருந்து

டப்பி 1-க்கு விலை அணா 6. டஜன் ரூபா 3.
தபால் கூலி இனம்.

மிகுந்த மணம்! சிறந்த குணம்!!
- பால் பெருங்காயத்தை -
உபயோகியுங்கள்.

கருப்புப் பெருங்காயம் ஒருவீசை உபயோகிப்பதற்கு இது ஒரு தோலாஉபயோகித்தால் போதுமானது. டப்பி 1-க்கு விலை அணா 4. டஜன் ரூபா 3. தபால் கூலி இனம்.

சிறந்த நோய் நிவாரணி
ஆர்யாஞ்ஜன்
எல்லா வலிகளையும்,
வீக்கங்களையும், நோய்
களையும் நீக்குவதில்
ஒப்புயர்வற்றது.
புட்டி 1-க்கு விலை அணா 8.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். 88, தங்கசாலை வீதி, சென்னை.

N. B. விபர கேட்லாக்கிற்கு எழுதவும். சென்னைக்கும் வெளியூருக்கும் விற்பனை வியாபாரிகளும், கான்வாஸர்களும் தேவை. கடிதங்கள் இங்கிலீஷில் எழுதுக.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

சோல் ஏஜன்ட்ஸ்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்
களுக்கு ரூ. (2-0-0)பிரான்சு:

டிப்போ, பம்பாய்
கல்கத்தா

மதுரை
காஞ்சீபுரம்.

:: பிரபல ஜோதிஷர் :: மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர்.

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர், ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

வர்த்தமானம்.

மதிப்புரை

நவீன பாரதி

இந்தத் தேசிய மாதப்பத்திரிகையின், மூன்முவது மாலையின் முதல்மணி வரப்பெற்ருேம். ஜனங்களினிடையே தேசபக்தி முதலிய தன்மைகளை ஊட்டுவதற்கென்று ஆர்வமுடன் நிலவிவரும் இப்பத்திரிகையைத் தமிழுலகம் நன்கு அறிந்திருக்கு மென்பதற்கு ஐயமில்லை. இதனைப் "பாரதி' என்னும் பேரோடு இரண்டு ஆண்டுகளுக்குமுன் ஆரம்பம் செய்த ஆசிரியர், ஸ்ரீமான். R. நாயாயணசாமி அவர்கள், அடக்குமுறைக்கு அடங்க மனங்கொள்ளாது சிறையகத்தே இப்பொழுது வைகின்ருராஞலும், அவர் தம் உண்மைக் குணங்களிஞல் தமிழுலகிற்கு ஓர் விளக்கென்று ஏற்றிய இப்பத்திரிகை அணையாமல் காத்து அக்கருமத்தைத் தொடுத்துச் செய்கின்ற ரா. சுப்ரமண்யம் அவர்களது முயற்சியின் அன்பு மிகவும் பாராட்டற்குரியது.

இவ்விதழ்களின்கண் திகழ்கின்ற கட்டுரைகள் பல திறத்தன. இப்பொழுது நோபல் வெகுமதி பெற்ற ஸர். ஸ். வி. இராமன் அவர்களது சரிதத்தை ஸ்ரீமான். K.G. கிருஷ்ணன் B, Sc (Honrs) வரைந்திருக்கின்ருர். ஸ்ரீமான், ஆர். வாசுதேவ சர்மா அவர்கள், M. A., B. L., தமிழ்க்கவி பாரதியாரின் கவிதாசக்தியைக் காட்டுவ தென்னுங் கருத்தோடு வரைந்துள கட்டுரையைப் படிப்பதற்கு யாவரும் விரும்புவர். "பிலிப்பைன் மக்களின் உரிமைப்பேறு" "சென்னை பென்ஸில் பாக்டரி" போன்ற கட்டுரைகள், அயல்நாட்டுக் குடியேற்றம் கைத்தொழிலபிவிர்த்தி முதலிய விடயங்களைப்பற்றிச் சனங்களுக்கு அறிவுறுத்தும் நோக்கத்தன. ஸ்ரீமான், A. சுருளியாண்டி அவர்கள், மொழிபெயர்த்துத் தந்துள "பிரடரிக் நிஷேயனின் நீதிமொழிகள்" போன்ற கட்டுரைகள் எத்திறத்தோர்க்கும் மிகவும் உபயோகமாயிருக்கும் என்பது திண்ணம். இத்தகைய உயரிய விடயங்களை விடாமல் அவர் அவ்விதழ்களில் வரைந்துவர வேண்டுமென விழைகின்ருேம். மற்றப் பத்திரிகை உலகத்தினின்று ஆயந்தெடுத்து ஆசிரியர் தந்திருப்பவைகளும் அவாது குறிப்புக்களும் நற்பயன் அளிக்கவல்லன.

நல்ல காகிதத்தில் சுத்தமாக அச்சிடப்பெற்றிருக்கின்ற இம்மாதப்பத்திரிகைக்கு உள்நாட்டு வருட சந்தா. ரூ. 2-0-0, வெளி நாடுகளுக்கு ரூ. 2-8-0. வேண்டுவோர், ஆசிரியர், உத்தமபாளையம், மதுரை ஜில்லா என்னும் விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக் கொள்ளுமாறு விழைகின்ருேம்.

நாஷனல் ஸோப்

'நாஷனல் ஸோப்' துண்டொன்று எமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. துணிகளைச் சுத்தம் செய்வதற்குரிய சிறந்த தன்மைகள் இதனில் இருக்கின்றன. நுரை நன்ருக வருகின்றது. கொழுப்பில்லை என நினைக்கின்ருேம். துணிகளை அரித்துவிடக்கூடிய மருந்தொன்றும் இதனிற் சேர்க்கவில்லை என்று கூறப்படுகின்றது. இந்த "ஸோப்" இந்தியாவிலேயே செய்யப்படுகின்றது. Shelat Baothers, general Merchants, 67, China Bazzar Road, Madras, என்னும் விலாசத்திற் கெழுதி விவரம் தெரிந்து கொள்ளலாம்.

*   *   *

காலஞ்சென்ற பண்டிதர் மோதிலால் நேருவின் ஞாபகச்சின்னச் சிலை யெழுப்புவதற்கென ஒரு அகில இந்திய கமிட்டி முயன்றுவருகின்றது. இந்நிதிக்கு லக்னேவில் ஒருலக்ஷ ரூபாய் சேர்க்கலாயிருக்கின்றது என ஒரு அலகபாத் செய்தி கூறுகின்றது.

*   *   *

கல்கத்தாவிலுள்ள செல்வர்களில் ஒருவரான திரு. பிரஸாத்ராய் என்பவரின்தோட்டத்திலிருந்து திருமாலின் விக்ரஹம் ஒன்று அகப்பட்டதென்றும், இது போன்ற பெரியதும் வேலைப்பாடுடையதுமான விக்ரஹம் இதுவரை அகப்பட்டதில்லை என்றும், அனேக சிற்பிகள் இதன் அமைப்பைக் கண்டு வியக்கின்றனர் என்றும் கல்கத்தாச் செய்தியொன்று கூறுகின்றது.

*   *   *

ஜவுளி இறக்குமதி:—பம்பாய் ஆலைச் சொந்தக்காரர் சங்கத்தார் உத்தியோகமுறையில் ஒரு அறிக்கையை வெளியிட் டிருக்கின்றனர். அதில் 1930-ம் வருஷத்தில் இந்தியாவிற்குள் இறக்குமதியான அந்நியத் துணி நூல் இவற்றைப் பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன. அவையே விஷயங்களை விளக்கக் கூடியனவாக இருக்கின்றன:—1930-ம் வருஷம் ஜனவரி முதல் டிசம்பர் 31-ந் தேதி வரையிலுள்ள வருஷத்தில் 1970லட்சம் கெஜம் நீளமுள்ள அந்நிய நாட்டுத் துணி இந்தியாவுக்குள் இறக்குமதியாயிற்று. 1929-ம் வருஷத்தில் 5650 லட்சம் கஜம் துணி இறக்குமதி யாயிற்று. இந்த வருஷத்திலும் முன் வருஷத்தைக் காட்டிலும் 2680 கெஜம் துணி குறைந்தது. அதாவது அந்நியத்துணி இறக்குமதியில் 100க்கு 48-வீதம் குறை வேற்பட்டது. 1929, 1930 வருஷங்களில் பிரிட்டனிலிருந்து இறக்குமதியான ஜவுளி முறையே 2810 லட்சம் கெஜமாகவும், 1420 லட்சம் கெஜமாகவும், ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஜவுளி முறையே 2190 லட்சம் கெஜமாகவும் 121 லட்சம் கஜமாகவும் இருந்தன. 1929-ம் வருஷத்தில் 280 லட்சம் இராத்தல் நூல் இந்தியாவுக்குள் இறக்குமதி செய்யப்பட்டது. இது 1930-ம் வருஷத்தில் 160 லட்சம் கெஜமாக குறைந்து போய் விட்டது. 1930-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் 66 லக்ஷம் கெஜம் அந்நியத் துணி இறக்குமதி செய்யப்பட்டது. சாதாரணமாக முன்னர், மாதம் 470 லக்ஷம் கெஜம் துணி அயல் நாடுகளிலிருந்து இறக்குமதியாவது வழக்கம்.

விஜய ரக்ஷித கவசம்



இது ஓர் மஹானின் மந்திர உபதேசத்திஞலும், ஓர் அபூர்வ மூலிகையிஞலும் தயாரிக்கப் படுகிறது. இதை அணிபவர்கள் கிரகதோஷம் முதலிய பல துன்பங்களிலிருந்து விடுபடுவதும் தவிர, எவ்வித காரியங்களிலும் வெற்றியடைந்து, ஆரோக்யம், சந்தானம், ஐஸ்வர்யம், தெய்வானுக்கிரகம், மனநிம்மதி இவைகளைப் பெறுகிருர்களென்பதை அனுபவத்தாலறியலாம். வெள்ளிக் கவசம் ரூ. 5. தங்கம் ரூ. 15.

விலாசம்:—புரபசர். கா. கோவிந்தாச்சார், மெஜிஷன் &மெஸ் மெரிஸ்ட், 218, தங்கசாலை, மதராஸ்.

KALANILAYAM. REG. NO. M. 2324.

அசல் சேப்ரோல் வாடை அசல் பசும்நெய் மணம்
இன்புறும் காரம் இவைகள் ஒருங்கே அமைந்ததும்
90-வருஷகாலமாக உலக முழுவதும் பிரசித்தி
பெற்றதுமான

அசல் ஷண்முகம் பட்டணம் பொடி

இடம்பொருள் ஏவல் எள்ளளவும் குன்றாது சடமெனும் புகையிலை சகல
விதத்திலும் தெரிந்தெடுத்து ஏற்ற முறைப்படி முடித்து
வாங்குவோர் பயனையே மிக நாடுவது எது?
மண்ணில்வாழ் மாந்தர் வாழ்க்கைக் கின்றியமையாததும்
மகிழ்ச்சி யூகம் ஊக்கம் முதலியவை உபயோகிக்கும் போதெல்லாம்
ஊட்டுவதும் அவரவர் தம் மனத்துயரை ஓட்டுவதும் எது?

அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே!!

அ ச ல் ஷ ண் மு க ம் ப ட் ட ண ம் பொ டி

எல்லாரையும் எப்பொழுதும் ஏமாற்ற முடியாதென்ற சொல்லால் முக்காலத்
திலும் முதன்மைபெற்ற மூதுரையின் முறைபற்றி வியாபாரம் நடத்திப்
பரவைசூழ் புவியில், பாவலர், நாவலர் ஆவலோடு பன்முறை
ஷண்முகம் பட்டணம் பொடி! ஷண்முகம் பட்டணம்
பொடி!! எனப் பதம்பாடும் எங்கள்

அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே!!

ஷண்முகம் பட்டணம் பொடி கம்பெனி, லிமிடெட்..

போஸ்ட் பாக்ஸ் 140, மதராஸ்.

குறிப்பு:—பல போலிப்பொடிகள் தோன்றித் தேகாரோக்கியத்திற்கு இடையூறு யிருப்பதால் 90-வருஷகாலமாகப் பிரசித்தி பெற்று உலகடிரேட் மார்க்குள்ள அசல் ஷண்முகம் பட்டணம் பொடியையே உபயோகித்து ஆனந்தத்தை அடையுங்கள்.

இந்த விளம்பரத்தைத் தங்கள் ஊர்ப்பொடிக் கடைகளில் காட்டி இதில் குறித்திருக்கும் அசல் ஷண்முகம் பட்டணம் பொடி இல்லாத 6-கடைகளின் விலாஸங்களைத் தெரிவித்தால் ஒரு அழகிய காலண்டர் இனமாகக் கொடுக்கப்படும்.



Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)